பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2053 ஐப்பசி 23 புதன்கிழமை 09.11.2022 கதிர் 04

### இது ரகசியம் அல்ல!

சர்ச்சைக்குரிய விடயத்தை இன்று நமது பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கம் கையாண்டு இருக்கின்றது. அதை முதலில் வாசியுங்கள்.

அதற்கு அப்பால், சில விடயங்களை என் பத்தியில் இன்று சுட்டுவது காலத்தின்

☞2

# 303 தமிழர்களையும் ஜப்பான் கப்பலே மீட்டது!







நடுக்கடலில் 300க்கும் மேற்பட்ட இலங்கை தமிழர்களுடன் தத்தளித்துக்கொண்டிருந்த படகை ஜப்பானின் கப்பலொன்றே மீட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

300க்கும் மேற்பட்ட இலங்கை தமிழ் அகதிகள் பயணித்துக்கொண்டிருந்த மீன்பிடிப்படகு சேதமடைந்து ஸ்பிராட்லி தீவுகளில் தத்தளித்துக்கொண்டிருந்தது என விஎன் எக்ஸ்பிரஸ் தெரிவித்துள்ளது.

மியன்மார் கொடியுடன் பயணித்துக்கொண்டிருக்கும் 'லேடிஆர்3' படகு ஆபத்தில் சிக்கியுள்ளது.

☞2

## நாட்டை அழித்தவர்கள் தீர்வு குறித்து கூக்குரல்

### சபையில் சாணக்கியன் சாடல்



நீண்ட காலமாக நீடித்து வரும் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்காமல் பொருளாதாரப் பிரச்சினைத்தீர்வைக்காணமுடியாது. நாட்டை அழித்தவர்கள் பிரச்சினைக்குத் தீர்வு

☞11

### போதைப்பொருள் தடுப்பு என்ற பெயரில்

## மாவீரர் வாரம் நெருங்கும் சமயத்தில் இராணுவச் சோதனைச் சாவடிகளா?

### ஸ்ரீகாந்தா போர்க்கொடி



யாழ்ப்பாணம், நவம்பர் 09

மாவீரர் நினைவேந்தல் வாரம் நெருங்கி வரும் சூழ்நிலையில், போதைப்பொருள் தடுப்பு என்ற பெயரில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பிரதான வீதிகளில் இராணுவச் சோதனைச் சாவடிகள் அமைக்கப்படும் நடவடிக்கை, நீறுபூத்த நெருப்பாக நீடிக்கும் தமிழ் மக்களின் நீண்டகால துயர நினைவுகளை உரசிப் பார்க்கும் ஓர் உளவியல் துன்புறுத்தலாக மட்டுமே அமையும்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் மூத்த சட்டத்தரணி ந.ஸ்ரீகாந்தா தெரிவித்தார்.

☞2

## யாழ். நுணாவில் விபத்தில் 2 இளைஞர்கள் படுகாயம்



யாழ்ப்பாணம், நுணாவில் பகுதியில் நேற்றுப் பிற்பகலில் இடம்பெற்ற விபத்தில் இளைஞர்கள் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

ஏ9 வீதி ஊடாக பயணித்த பஸ்ஸுடன்

☞2

## பலாலியில் பயணிகளுக்கான வரியை அரைவாசியாகக் குறைக்க இணக்கம்

பலாலி சர்வதேச விமான நிலையத்தில் பயணிகள் சிட்டைக்கான விமான நிலைய வரியாக அறவிடும் கட்டணத்தை 60 டொலரில் இருந்து 30 டொலராக - அரைவாசியாக - குறைப்பதற்கு இலங்கை அரசு இணங்கி உள்ளது. இது குறித்து இந்திய தரப்புக்கு தற்போது தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் அறியவந்தது.

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் ஒரு பயணிக்கு 60 டொலர் கட்டணம் அளவிடப்படுகிறது. ஆனால் மத்தள சர்வதேச விமான நிலையத்துக்கு இரண்டு வருட காலத்துக்கு இந்த கட்டணம் ஏதுமின்றியே சேவைகளை நடத்துவதற்கு அனுமதி

☞2

## புதுமுறிப்புக் குள வாய்க்காலில் வெட்டுக் காயங்களுடன் சடலம்



கிளிநொச்சி - புதுமுறிப்பு குளத்தின் நீர்ப்பாசன வாய்க்காலில் நேற்றுக் காலை வெட்டுக் காயங்களுடன் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. வீதியால் சென்றவர்கள்

☞2

## கடலட்டைப் பண்ணைகளின் கெடுதியில் இருந்து வடக்கு மீனவரையும் வளத்தையும் காப்பாற்றுங்கள்!

### ஜனாதிபதி, பிரதமருக்கு மன்றாட்டத்துடன் விண்ணப்பம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நவ.09

வடக்கு மாகாண மீனவர்களின் வாழ்வாதாரம், கடல் மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க கோரி வடக்கு மீனவர்கள் ஜனாதிபதி மற்றும் பிரதமர் உட்பட பலரிற்கும் மகஜர் அனுப்பி வைத்துள்ளனர்.

இது தொடரபால் வட மாகாண மீனவர் சங்க சமாசத் தலைவர் அ.அன்னராசா மற்றும் நா.வர்ணகுலசிங்கம் ஆகியோர் ஒப்பமிட்டு அனுப்பியுள்ள கடிதத்திலேயே மேற்படி கோரிக்கையை அவர்கள் விடுத்துள்ளனர்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது:-

☞11

## இரு மாணவர் இடையே கைகலப்பு; ஒருவர் சாவு

### தம்பிலுவிலில் சோகச் சம்பவம்



அம்பாறையில் இரண்டு மாணவர்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலில், 13 வயதான மாணவன்

☞2

# காணாமல் போனோருக்கான அலுவலகத்தின் தவிசாளரைப் பதவியில் இருந்து தூக்குங்கள்!

### மனோ கணேசன் நேற்று அமைச்சர் விஜேதாஸவிடம் காட்டமாகத் தெரிவிப்பு



"கடந்த அரசாங்கத்தின் இறுதி காலத்தில் நான்தான் இந்த விடயம் தொடர்பான அமைச்சர். ஆகவே எனக்கு, இந்த காணாமல் போனோர் காரியாலயம் பற்றி நன்கு தெரியும். இங்கே இதுபற்றி எம்.பி. சுமந்திரன் கூறியதை நான் ஏற்கிறேன். காணாமல் போனோர் தொடர்பான அலுவலகத் தவிசாளருக்கு பைத்தியமோ தெரியவில்லை. இந்நாட்டில் யாரும் காணாமல் போகவில்லை என்று கூறுகிறார். அப்படி பேச வேண்டாம் என்று அவருக்கு கூறுங்கள். முதலில் அவரை அந்த தவிசாளர் பதவியில் இருந்து விலக்குங்கள்" - என தமிழ் முற் போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

☞11

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டாயம் என்று நினைக்கிறேன்.

சம்பந்தன் சிறந்த அரசியல் தலைவர். திறமையானவர். மும்மொழி ஆற்றல் மிக்கவர். சட்ட வல்லுனர். பிழைக்கத் தெரிந்தவர் என்பவை எல்லாம் வேறு விடயங்கள்.

ஆனால் ஜனநாயக மாண்பை அவர் பேணிப் பாதுகாத்தார் என்று விருதுக்குரிய தகுதி கொண்டவரே அல்லர் என்னும் கருத்தைத்தான் நமது ஆசிரியர் தலையங்கம் இன்று சுட்டுகின்றது.

தமிழ்த் தேசிய இனத்தை, மிக முக்கியமான ஒரு காலகட்டத்தில், ஜனநாயக ரீதியில் பலமாக ஒன்றிணைத்துக் கட்டிக் காக்கும் தனது தலையாய பொறுப்பை அவர் விட்டேத்தியாக நடந்து, பொறுப்பின்றிச் செயற்பட்டு, சீரழித்தார் என்ற கருத்துத்தான் என்னுடையது.

தமிழ் ஜனநாயக சக்திகளை ஒன்றிணைத்து, அனைவரையும் ஐக்கியப்படுத்தும் தலைமைத்துவத்தை வழங்க அவர் சிரத்தையே எடுக்கவில்லை. எல்லாகட்சிகளையும், பிரமுகர்களையும், தமது கட்சிக்குள்ளும், கூட்டமைப்புக்குள் ளும் அரவணைப்பதை விட அவர் தூக்கி எறிந்தே நடந்தார் என்பதே உண்மை.

நாடாளுமன்றத்தில் தமக்குப் பின்னால் - தமது தலைமையில் - கீழ் எத்தனை எம்.பிக்கள் என்று கணக்கு காட்டுவதில் மட்டும்தான் அவரது கரிசனை இருந்தது. அந்தக் கட்சிகளின், எம்.பிக்களின், பிரமுகர்களின் ஜனநாயக உரிமைகளையும் தனித்துவங்களையும் மதித்து, சகிப்புத்தன்மையுடன் அரவணைத்து, ஒரு தேசிய சக்தியாகக் கூட்டமைப்பை கட்டி எழுப்பி, மிளிரச் செய்வதில் அவர் கவலை கூட கொள்ளவில்லை.

அதனால்தான், 2009 இல் அவரிடம் ஒப்படைக்கப்பட்ட தனித்துவத் தலைமை சிதறி, இன்று ஏழு, எட்டு அணிகள் - கட்சிகள் - பிரிந்து உருவாகி இருக்கின்றன.

தனது தாயகமான திருகோணமலையிலும் சரி, தான் தலைமை வகித்த கூட்டமைப்புக்குள்ளும் சரி, பொருத்தமான அடுத்த தலைமையை தேர்ந்து, அவர் விட்டு செல்லவில்லை, மாறாகக் குழப்பத்தையும் குளறுபடிகளையும்தான் மிச்சமாக அவர் விட்டு வைத்திருக்கின்றார்

ஜனநாயக கட்டமைப்பில் தலைவர் ஒருவர் விலகினால் - அல்லது பிரிந்தால் - அந்தக் கட்டமைப்பு அடுத்த தலைவரை ஜனநாயகரீதியில் தானே தெரிவு செய்யும். அதற்கு அந்தக் கட்சியில் அல்லது கட்டமைப்பில் ஜனநாயகம் எஞ்சியிருக்க வேண்டும். அதற்குத் தன்னும் சம்பந்தன் இடம் விட்டு செல்வாரா என்ற சந்தேகம் எனக்கு உண்டு.

சரி. ஜனநாயக மாண்புக்கு உரியவர் அல்லர் சம்பந்தன் என்றால், வேறு யாரேனும் தமிழ் தலைவர்கள் அதற்குப் பொருத்தமாக இருக்கின்றார்களா?

இருக்கின்றார். இது விடயத்தில் மலையகத்திடம் நமது வடக்கு - கிழக்குத் தமிழ் தலைவர்கள் கேட்டுப் படிக்க வேண்டும் என்பது கசப்பான உண்மை.

நாட்டில் உள்ள எல்லா அரசியல் கட்சிகளும் பிளந்து, பிரிந்து, குட்டி போட்டுக் கொண்டிருக்கின்றன.

ஆனால் மலையகத்தில் இருக்கும் தமிழ் மக்களின் மூன்று கட்சிகளை - மனோவின் கட்சி, திகாம்பரத்தின் கட்சி, ராதாகிருஷ்ணன் கட்சி - மூன்றையும் கடந்த ஏழு ஆண்டுகளாக ஒரு கூட்டாகக் கட்டிப்போட்டு, அந்தக் கூட்டையும் கூட ஒரு கட்சியாகப் பதிவு செய்து (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கவனிக்குக!) வடக்கு - கிழக்குக்கு வெளியே ஒரே கட்டமைப்பாக வெற்றிகரமாக வழிநடத்துகின்றார் மனோ கணேசன். இப்போது மலையகத்தின் அடுத்த பெரிய கட்சியான இ.தொ.காவையும் தமது ஐக்கிய வலைக்குள் வீழ்த்தும் காய் நகர்த்தலை வெற்றிகரமாக முன்னெடுத்து இருக்கிறார் அவர்.

சம்பந்தனுக்கு கொடுத்த விருதை மனோ கணேசன் கொடுத்திருந்தால் எவ்வளவு பொருத்தமாக இருந்திருக்கும் என்பது எனது ஆணித்தரமான கருத்து. நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் வாசகர்களே...?

மனோ கணேசனையும், ஏனைய மலையகக் கட்சிகளின் தலைவர்களையும் சம்பந்தனும் மாவையும் ஏனைய தமிழ் தலைவர்களும் பார்த்துப் பாடம் படிக்க வேண்டும். படிப்பார்களா? ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்.

**- மின்னல் -**

## 303 தமிழர்களையும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தபடகு 303 இலங்கையர்களுடன் கனடா செல்ல முயல்கின்றது என தகவல் கிடைத்ததாக வியட்நாமின் கடல்சார் மீட்பு மற்றும் ஆராய்ச்சி ஒருங்கிணைப்பு நிலையம் தெரிவித்துள்ளது.

நவம்பர் ஐந்தாம் திகதி குறிப்பிட்ட கப்பல் தென்கரையோரத்தில் உள்ள வுங் டாவுவில் இருந்து 258 கடல்மைல் தொலைவில் காணப்பட்டது .

படகின் இயந்திர அறைக்குள் நீர் சென்றதால் அந்த கப்பல் தத்தளிக்க தொடங்கியது. கடல் கொந்தளிப்பாக காணப்பட்டுள்ளது.

வியட்நாமின் கடல்சார் மீட்பு மற்றும் ஆராய்ச்சி ஒருங்கிணைப்பு நிலையம் கப்பலை தொடர்ப. கொள்ள முயற்சித்துள்ளது. அந்த பகுதியில் உள்ள ஏனைய கப்பல்களிற்கு அவசர சமிக்ஞையை அனுப்பியுள்ளது.

திங்கட்கிழமை அந்த பகுதியில் ஜப்பான் கொடியுடன் ஹெலியோஸ் லீடர் என்ற கப்பல் காணப்பட்டுள்ளது. படகில் தத்தளித்துக் கொண்டிருந்தவர்களை காப்பாற்றுமாறு அந்த கப்பலிற்கு உத்தரவு வழங்கப்பட்டது.

ஜப்பான் கப்பல் உடனடியாக தத்தளித்துக்கொண்டிருந்த படகை நோக்கி சென்றுள்ளது. படகில் இருந்தவர்கள் மிகுந்த பதற்றத்துடன் காணப்பட்டுள்ளனர்.

ஜப்பான் கப்பல் படகில் இருந்தவர்களை மீட்டு அவர்களிற்கு மருத்துவ சிகிச்சைகளை வழங்கியுள்ளது.

வியட்நாம் மேலும் ஐந்து கப்பல்களை அந்த பகுதிக்கு அனுப்பியதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளன. 20 சிறுவர்கள், 19 பெண்கள் உட்பட 303 பேரும் நேற்று வியட்நாமின் வுங் டாவுவை சென்றடைவார்கள் என எதிர்பார்க்கப்பட்டது.

## யாழ். நுணாவில் விபத்தில்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு இளைஞர்களும் படுகாயமடைந்துள்ளனர்.

இதில் வெற்றிலைக் கேணிப் பகுதியைச் சேர்ந்த 22 மற்றும் 19 வயதான இரு இளைஞர்களே படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## மாவீரர் வாரம் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பவை வருமாறு:-

யாழ்ப்பாண மாவட்டத்தில் போதைப் பொருள்பாவனையையும் கடத்தலையும் தடுக்கும் நோக்குடன் பிரதான வீதிகளில் இராணுவ சோதனைச் சாவடிகள் அமைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருப்பது ஆச்சரியத்தை அளிக்கின்றது.

பாரிய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் அன்றாட வாழ்கைக்கே அல்லாடிக் கொண்டிருக்கும் பொதுமக்கள் அனுபவிக்கும் துன்பதுயரங்கள் போதாது என்ற ரீதியிலா இந்த நடவடிக்கை என்றே கேட்கத் தோன்றுகின்றது.

யாழ்ப்பாணம் உட்பட தமிழ்ப் பிரதேசத்தில் இராணுவச் சோதனைச் சாவடிகள் என்பன அநாவசியமான கெடுபிடிகளை ஏற்படுத்தி, உளவியல் ரீதியாக அச்சுறுத்தி நிற்கும், வெறுப்புக்குரிய ஒரு பொறிமுறையாகவே கடந்த காலத்தில் இருந்து வந்துள்ளன என்பதே அனுபவபூர்வமான உண்மையாகும்.

இந்தப் பின்னணியில், வடக்கின் ஆளுநர் இராணுவச் சோதனைச் சாவடிகளை ஏன் பரிந்துரைத்துள்ளார் என்பது புதிராக உள்ளது.

மிகவும் ஆட்சேபகரமான விடயமாக படைத்தரப்பினரால் தொடர்ந்து அனுசுப்பட்டுவந்திருக்கும் மாவீரர் நினைவேந்தல் வாரம் நெருங்கி வரும் சூழ்நிலையில், போதைப்பொருள் தடுப்பு என்ற பெயரால் மேற்கொள்ளப்படும் இந்த நடவடிக்கை, நீறுபூத்த நெருப்பாக நீடிக்கும் தமிழ் மக்களின் நீண்டகால துயர நினைவுகளை உரசிப்பார்க்கும் ஓர் உளவியல் துன்புறுத்தலாக மட்டுமே அமைய முடியும் என் பதைதயக்கம் எதுவும் இன்றி சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

இந்தச் சோதனைச் சாவடிகளில் சில சிற்றெறும்புகள் வேண்டுமானால் சிக்கலாம். ஆனால், சுண்டெலிகளும் பெருச்சாளிகளும் ஒருபோதும் மாட்டிக்கொள்ளப் போவதில்லை.

கடலிலே கடற்படையிடம் போதை வஸ்து மீன்கள் சிக்குவது போல், தரையில் நிகழப் போவதில்லை.

இந்தச் சூழ்நிலையில், அர்த்தமற்ற இந்தத் திட்டத்தைக் கைவிடுமாறு வடக்கு மாகாண ஆளுநரை நாம் கோருகின்றோம்.

அதேவேளையில், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் விஸ்வரூபம் எடுக்க முனையும் போதைப்பொருள் பிரச்சினைக்கு முடிவு கட்ட அறிவார்ந்த ரீதியில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் அவசரமாக எடுக்கப்படுவது அவசியமானது என்றும் நாம் தெரிவிக்க விரும்புகின்றோம்.

சமூகத்தின் சகல தரப்பினரையும் போதைப்பொருள்களுக்கு எதிரான போராட்டம் ஒன்றில் உத்வேகத்தோடு ஈடுபடுத்தும் திட்டமொன்று தீட்டப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதே எமது வேண்டுகோள் ஆகும்.

சமூகத்துறை, நிர்வாகத்துறை, பொலிஸ் துறை உட்பட படைத்தரப்பு மற்றும் சட்டத்துறை, நீதித்துறையோடு, சமயத்துறையையும் உள்ளடக்கிய ஒரு பரந்த திட்டம் வகுக்கப்பட்டு, முன்னெடுக்கப்பட்டால் மட்டுமே சமூகத்தின் சகல பிரிவினரின் பூரண ஒத்துழைப்பைப் பெற்று இப் போராட்டத்தில் வெற்றி பெற முடியும்.

போதைப் பொருள் பாவனையில் சிக்கியுள்ள இளைய சந்ததியினரை மீட்டெடுப்பதில் உளவியல் ரீதியான செயற்பாடுகளும், பொருளாதார ஊக்குவிப்புடன் கூடிய கல்வி மற்றும் தொழிற் பயிற்சிகளும் அவசியமானவை என்பதையும் நாம் அழுத்திக் கூற விரும்புகின்றோம்.

இந்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்கு உதவுவதிலும் ஊக்கம் அளிப்பதிலும் சமூக செயற்பாட்டாளர்களின் பங்களிப்பு மிகவும் அத்தியாவசியமானது என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

இறுதியாகப் போதைப்பொருள் வியாபாரத்தையும், பாவனையையும் முறியடிப்பதில் கசப்பானதோர் உண்மையைத் தரிசித்தே தீரவேண்டும்.

அதிகாரம் மிக்க பலரின் ஆதரவோடும் அனுசரணையோடும்தான் யாழ்ப்பாணம் பிராந்தியத்தில் போதைப்பொருள் கடத்தல்காரர்கள் கௌரவத்தோடு வலம் வந்து கொண்டிருக்கின்றார்கள் என்பதே அந்த உண்மை. அது மட்டுமன்றி இவர்களின் தென்னிலங்கைத் தொடர்புகள் ஊடாகவே யாழ்ப்பாணம் இன்று மெல்ல மெல்ல நாசமாகிக் கொண்டிருக்கின்றது.

இந்த ஒட்டுமொத்த வலைப்பின்னலும் கண்டறியப்பட்டு, ஏதோவொரு விதத்திலாவது சம்பந்தப்பட்டோர் மீது சட்டம் பாயாத வரையில், பிரச்சினைக்கு முடிவு கட்டுவது என்பது பெரும் போராட்டமாகவே தொடரும் - என்றுள்ளது.

## இரு மாணவர் இடையே ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பரிதாபமாக உயிரிழந்துள்ளான்.

அம்பாறை, திருக்கோவில் பொலிஸ் பிரிவிலுள்ள தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயம்தில் 8 ஆம் ஆண்டில் கல்வி கற்றும் இரு மாணவர்களுக் கிடையே பாடசாலையில் கைகலப்பு ஏற்பட்டுள்ளது. அதிலொரு மாணவனின் வாயால் நுரை வெளிவந்துள்ளது. வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும் சிகிச்சை பலனின்றி அந்த மாணவன் உயிரிழந்துள்ளான்.

நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு இந்தக் கைகலப்பு இடம் பெற்றுள்ளதாகத் தெரிவித்த திருக்கோவில் பொலிஸார், தம்பிலுவில் ஏ.பி.சி வீதியைச் சேர்ந்த 13 வயதுடைய சிவபாலன் கிசாந் என்ற மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளான் என்றும் கூறினர்.

பாடசாலையில் ஒரே வகுப்பில் இரு மாணவர்களும் கல்விகற்றுவருகின்றனர். இந்த நிலையில் சம்பவதினமான நேற்றுப் பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை முடிவடைகின்ற நேரத்தில் உயிரிழந்த மாணவன் வகுப்பறை மேசையில் பெயின்றால் கீறியுள்ளார்.

சகமாணவனின் கை அந்த பெயின்றில் பட்டதுடன் கீறப்பட்டு இருந்ததும் அழிந்துவிட்டது. இதனையடுத்தே இவ் விருவருக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டுள்ளது. அதில், மரணமடைந்த மாணவன் வகுப்பறைக்குள் வைத்தே வாயில் நுரை தள்ளியுள்ளார்.

மாணவனை தாக்கிய சக மாணவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உள்ளான் எனவும் இருவரும் ஒரே பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் அறியமுடிகின்றது.

உயிரிழந்த மாணவனின் சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்த நடவடிக்கை மேற்கொண்டுவருவதாக தெரிவித்த திருக்கோவில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை அந்தபகுதி மக்கள் வைத்தியசாலையில் திரண்டுள்ளனர். இந்த பகுதியி இச்சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

## பலாலியில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பலாலிப் பயணிகளுக்கும் 60 டொலர் என்ற இலங்கை அரசின் கட்டண விதிப்பைக் கைவிட்டு, மத்தள போன்று அதை முழுமையாக ரத்து செய்யுமாறு வலியுறுத்தப்பட்டு வந்தது. இப்போது அந்த வரிக் கட்டணத்தை அரைவாசியாக - 30 டொலராகக் குறைக்க இலங்கை அரசு முன்வந்துள்ளது.

காலகதியில் அமைச்சரவை அனுமதி பெற்று கட்டணத்தை குறிக்கப்பட்ட காலத்துக்கு முழுமையாக ரத்து செய்வது குறித்து பரிசீலிக்கலாம் என்றும் கொழும்புதரப்பில் தற்சமயம் கூறப்பட்டுள்ளதாக அறிய வந்தது.

இந்த வரிக் குறைப்பால் பயணிகள் டிக்கெட் கட்டணம் 11 ஆயிரம் ரூபா வரைக் குறையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

விமானம் வந்திறங்கி செல்வதற்கான விமான நிலைய சேவைக் கட்டணங்கள், கொடுப்பனவுகளை இலங்கையில் இலங்கை ரூபாயில் செலுத்துவதற்கு கொழும்பு இணங்க கூடிய சாத்தியமும் உண்டு என கூறப்படுகின்றது.

இதனால் இந்த விமான சேவையை மீள ஆரம்பிக்க கூடிய நிலைமை வந்திருப்பதாகவும், இவ்வார இறுதியில் அல்லது அடுத்த வார முற்பகுதியில் விமான சேவை ஆரம்ப திகதி பற்றி உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் எனவும் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் நம்பிக்கை வெளியிட்டன.

## புதுமுறிப்புக் குள ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சடலம் வாய்க்காலில் கிடப்பதை அவதானித்துப் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

கிளிநொச்சி கோணாவில் ராஜன் குடியிருப்பை சேர்ந்த ப. சத்தியராஜ் (வயது 36) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே கொலை செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸாரின் முதல் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

கிளிநொச்சி நீதிவான் சடலத்தைப் பார்வையிட்ட பின்னர் சடலம் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. இது தொடர்பாக மேலதிக விசாரணை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மகேஷ் கட்டுலந்தவின் கருத்துகளே மக்களைக் கோபமடைய வைத்தது!

## நாடாளுமன்றில் சுமந்திரன்

காணாமல் போனோர் அலுவலகத்தின் தலைவர் தெரிவித்த கருத்து மக்களை மேலும் கோபத்துக்கு உள்ளாக்கியது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நாடாளுமன்றின் கவனத்திற்கு கொண்டுவந்தார்.

காணாமலாபோவார்கள் பற்றி விசாரணைகளை மேற்கொள்ள அந்த அலுவலகம் நிறுவப்பட்ட நிலையில் விசாரணைகளை மேற்கொள்ளாமலேயே இவ்வாறான அறிக்கையை வெளியிடுவது, விசாரணை தொடர்பான நம்பிக்கையைத் தராது என சுட்டிக்காட்டினார்.

இதேவேளை தமது பிள்ளைகளை, கணவரை இராணுவத்திடம் தாமே கையளித்தனர் எனப் பெற்றோர் மற்றும் மனைவிமார் தெரிவிக்கின்ற நிலையில் தம்மிடம் எவரும் சரணடையவில்லை என இராணுவம் வெளியிடும் அறிக்கை மக்களுக்கு மேலும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாகக் குறிப்பிட்டார்.

ஆகவே நீதி அமைச்சின் கீழ் உள்ள காணாமல் போனோர் அலுவலகம் சுயாதீனமாகவும் பக்கச்சார்பின்றியும் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் குறிப்பிட்டார்.

இதேவேளை, இந்தியாவில் தஞ்சமடைந்துள்ள இலங்கையர்களை மீண்டும் நாட்டில் குடியேற்ற எடுக்கும் முயற்சிகளுக்கு பாராட்டு தெரிவித்த சுமந்திரன், இருப்பினும் நாட்டில் அவர்களுக்கு போதுமான அளவு வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.



# புலோலி விவசாயிகள் நேற்றுப் போராட்டம்!



யாழ்ப்பாணம், நவ. 09

யாழ்ப்பாணம் வடமராச்சி, புலோலியில் விவசாயத்துக்கு தேவையான உள்ளீடுகள் மற்றும் மண்ணெண்ணெய் வழங்க கோரி விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

புலோலி கமநலசேவை நிலையத்துக்கு முன்பாக நேற்று (செவ்வாய்க்கிழமை) ஒன்றுகூடிய விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டதுடன் பேரணியாகப் பருத்தித்துறை பிரதேச செயலகம் வரை சென்றனர்.

பேரணியின் நிறைவில் மாவட்ட செயலருக்கான மகஜர் பருத்தித்துறை பிரதேச செயலரிடம் கையளிக்கப்பட்டது.

## திருநெல்வேலி பரமேஸ்வரக் கல்லூரியின் நூற்றாண்டு விழா சிறப்பு மலர் வெளியீடு!

திருநெல்வேலி பரமேஸ்வராக்கல்லூரியின் நூற்றாண்டு விழா சிறப்பு மலர் வெளியீடு எதிர்வரும் நவம்பர் 11 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

பரமேஸ்வராக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் யாழ்பாணக் கிளை ஏற்பாட்டில், பேராசிரியர் சுபதினி ரமேஸ் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராகவும், வாழ்நாள் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

வரலாற்றுச் சிறப்புகளைக் கொண்ட பரமேஸ்வரக் கல்லூரி நூற்றாண்டு விழா சிறப்பு மலரை செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் வெளியிட்டு வைக்கவுள்ளார். யாழ். பல்கலைக்கழக இந்து கற்கைகள் பீடத்தின் இந்து நாகரிகத் துறைத் தலைவர் கலாநிதி ச. முகுந்தன் மற்றும் சைவ சித்தாந்தத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் த. செல்வமனோகரன் ஆகியோர் நூல் மதிப்பீட்டுரைகளை நிகழ்த்தவுள்ளனர்.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மற்றும் சேர். பொன். இராமநாதன் கட்புல ஆற்றுகைக் கலைகள் பீட மாணவிகளின் விசேட நடன நிகழ்வுகளும் இந்த நிகழ்வில் அரங்கேற்றப்படவுள்ளன.

## யால சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு எதிராக சட்டம் பாயும்!

### மஹிந்த அமரவீர உறுதி



யால சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு எதிராக கடுமையாக சட்டம் அமுல்படுத்தப்படும் என அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று (செவ்வாய்க்கிழமை) கருத்து வெளியிட்ட அவர், இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைக்கு எந்த இடையூறும் ஏற்படாது எனக் கூறினார்.

தாம் வெளிநாடு சென்றிருந்த வேளையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும், சம்பவம் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்றும் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

## முட்டையை அதிக விலைகளுக்கு விற்பனை செய்பவர்கள்மீது சுற்றிவளைப்பு நடவடிக்கை

### நளின் பெர்னாண்டோ அதிரடி



கோழி முட்டைக்கான கட்டுப்பாட்டு விலை நிர்ணயம் செய்து வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ள போதிலும், அதிக விலைக்கு முட்டையை விற்பனை செய்யும் வியாபாரிகளை கண்டுபிடிக்க நேற்று (செவ்வாய்க்கிழமை) முதல் சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன என வர்த்தக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போது கால்நடை தீவனங்களின் விலையும் குறைந்துள்ளதால், அதிக விலைக்கு முட்டை விற்பனை செய்யும் வர்த்தகர்களை கண்டுபிடிக்க நுகர்வோர் விவகார அதிகாரசபை இந்த திடீர் சுற்றிவளைப்பை மேற்கொள்ளும் என அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

# நாணய நிதியத்திடமிருந்து அவசரகால கடனை இலங்கை ஒருபோதும்பெறாது!

## அடித்துக்கூறுகிறது மௌபிம ஜனதா கட்சி

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து அவசரகால கடனை இலங்கை ஒருபோதும் பெறாது என மௌபிம ஜனதா கட்சியின் தலைவரும் புலம்பெயர் தமிழ் மக்களின் பொதுச் செயலாளருமான நிமலன் விஸ்வநாதன் தெரிவித்துள்ளார். ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர் -

சர்வதேச நாணய நிதியம் வகுத்துள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்வதற்கான சரியான பொறிமுறை எவையும் இலங்கையிடம் இன்னும் இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கடன் வசதியை பெற்றுக்கொள்ளும் திறன் அரசாங்கத்துக்கு உள்ளது என்பதைக் காட்டுவதற்காக அப்பாவி மக்கள் மீது வரிகளை சுமத்தவே அரசாங்கம் முயல்கிறதென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் கடனுடன்கூட நாட்டை உயர்த்துவது கடினம் என்பதை சர்வதேச நாணய நிதியத்தின் செயலாளர் ஒருவர்கூட உறுதிப்படுத்தனார் என விஸ்வநாதன் கூறியுள்ளார்.

தமது நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான வழிமுறைகள் இருக்க வேண்டும் என்று ஐ.எம்.எவ். அதிகாரிகள் தெரிவித்தனர் என்றும் அப்பாவி மக்கள் மீது பெரும் வரிகளை சுமத்தி, நாடு முன்னேற முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு இந்த மிகப் பெரிய வரிகளால் நாட்டில் மக்கள் எந்த வியாபாரத்தையும் செய்ய முடியாது என்றும் அவர் கூறியுள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சம்பந்தம் இல்லாத விருது

விருதுகள் பல சமயங்களில் விமர்சனத்திற்கு உள்ளாகின்றமை தவிர்க்க முடியாததுதான். அதுவும் சிக்கலுக்குரிய விடயங்களைத் தொட்டு விருதுகள் வழங்கப்படும் போது அவை சர்ச்சையில் சிக்குவது புறமொதுக்க முடியாததாகிவிடும்.

அதுவும் அரசியல் தொடர்பான விடயத்தில் விருது என்றால் அது கிளப்பக்கூடிய சர்ச்சை, மிக்க விமர்சனத்தைத் தருவதாகத்தான் இருக்கும். இந்த சர்ச்சைகளை காய்தல், உவத்தல் அகற்றி – விருப்பு,வெறுப்பு நீக்கி – கையாள்வது முக்கியமாகும்.

‘ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காக தன்னை அர்ப்பணித்த மூத்த அரசியல் பிரமுகர்களை அங்கீகரிக்கிறோம்’ என்ற பெயரில் ‘ஜனநாயகப் பொன் விருது’ தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தனுக்கு, இந்தத் தள்ளாத 89 வயதில் வழங்கப்பட்டிருக்கின்றது.

தாம் அரசியலுக்குப் புகுந்த 1977க்குப் பிறகு இந்த 45 வருடங்களில், சுமார் 30 ஆண்டுகள் எம்.பியாகவும், சுமார் 20 ஆண்டுகளுக்கு மேல் கூட்டமைப்புத் தலைவராகவும் அவர் இருந்திருக்கிறார் – இருக்கிறார் – என்பது வாஸ்தவம்தான். ஆனால் இந்தக் காலத்தில் அவர் ஜனநாயகத்தை கட்டிக் காத்தார் என்று மெச்சுவதற்கு எதுவும் இல்லை என்பதுதான் இந்த விருதைக் கேள்விக்கும், கேலிக்கும் உள்ளாக்கி இருக்கிறது.

2009 இல் புலிகளின் அழிவோடு கிட்டிய தமிழ்த் தேசிய ஏக தலைமை என்ற உயரிய பதவியை, செவ்வனே கையாளத் தவறி, தமிழ்த் தேசியத் தரப்புகள் பல பிரிவுகளாகப் பிளந்து, துண்டுகளாகச் சிதறுண்டு போக வழிவிட்டு, பார்த்து வாளாவிருந்தமைதான் ஜனநாயகத்தைப் பேணிய அவரது மகத்துவமும் மாண்பும்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஈ.பி.ஆர்.எல்.எவ்., தாயக மண்ணோடு இருந்தவர்களை ஒதுக்கி வடக்கு மாகாண சபைக்கு அவர் கைப்பிடித்துக் கூட்டி வந்த விக்கினேஸ்வரனின் அணி, அனந்தி தரப்பு, ஐங்கரநேசனின் அமைப்பு, ஸ்ரீகாந்தா – சிவாஜி கூட்டு என்று காலத்துக்கு காலம் கூட்டமைப்பு பிளந்து சிதறுண்டு போக வழி செய்து, வாளாவிருந்தமை ஒன்றே அவரது தலைமையின் சிறப்பு.

பேராசிரியர் சிற்றம்பலம், சிவகரன் என்ற தனித்துவ ஆளுமைகள் கூட்டமைப்பை விட்டு வெளியேறுகின்றமையை பல்லிளித்துப் பார்த்திருந்தமைதான் அவரது ஜனநாயக தலைமைத்துவத்திற்குரிய பெருமை.

அவரின் ஜனநாயகப் பிறழ்வுகளின் பெறுபேறுகள் அவை.

கூட்டமைப்புக்குள் ஜனநாயகப் பண்பியல்புகளைச் சரிவரப் பேணுவதை உறுதிப்படுத்த தலைவர் என்ற முறையில் அவர் தவறியமைதான் – வேண்டுமென்றே தவறியமைதான் – இந்தப் பிளவுகள், பிரிவுகள் அனைத்துக்கும் மூல காரணம் என்பது அரசியல் அரிச்சுவடி படித்தவருக்கும் கூடத் தெரிந்த விடயம்.

தமிழ் தேசியத்தின் தனித்துவ தலைமை என்ற உயரிய பதவியை மாண்புடன் பேண சிரத்தையே எடுக்காத சிறுமைத் தலைவராக அவர் சரித்திரத்தில் பதியப்படுவார் என்பது மறுக்க முடியாத உண்மை.

தமிழ் தேசிய தலைவராக மட்டுமல்ல, தமது பிரதேசத்தின் – திருகோணமலையின் – தலைவராகக் கூட அவர் எதுவும் செய்யவில்லை. நாடாளுமன்ற கதிரையை 30 ஆண்டுகள் சூடேற்றி அனுபவித்தாரே தவிர, தமது பிரதேசத்தையும் அவரால் காபந்து பண்ண முடியவில்லை, தமது காலத்தின் பின்னரும் தமது பிரதேச மக்களை வழிநடத்தக் கூடிய அடுத்த மட்ட ஜனநாயக தலைவர்களையும் கூட அவரால் அங்கு உருவாக்க முடியவில்லை. உருவாக்க அவர் முயலவும் இல்லை. விரும்பவும் இல்லை. அவரின் இந்த செயலின்மை தமிழ்த் தேசிய மட்டத்திலும் பொருந்தும்.

அவர் சிறந்த நாடாளுமன்றப் பேச்சாளர். அரசியல் மூளைசாலி. நரித்தந்திரசாலி. சட்ட விற்பன்னர். ஆளுமை மிக்கவர். ஆனால் அவை எவையும் ஜனநாயக மாண்பைப் பேணும் பெரும் சிறப்புக்குள் வராத பின்னணியில், ஜனநாயகத்தை பாதுகாத்தமைக்கான சிறப்புக்குரிய விருது அவருக்கு வழங்குவது பொருத்தமானதல்ல. அது கேலிக்குரிய விடயம் என்பதைப் பதிவு செய்ய விரும்புகிறோம்.

## தமிழீழ விடுதலைபுலிகள் குறித்த பிரசாரத்தை தவிர்க்குக மாவீரர்தின நிகழ்வு ஏற்பாடு செய்யும் தரப்புக்கு அறிவிப்பு!

தமிழீழ விடுதலைப் புலிகள் அல்லது அதன் உறுப்பினர்கள் மீதான எந்தவொரு பிரசாரத்தையும் தவிர்க்குமாறு பொலிஸாரும் பாதுகாப்புப் படையினரும் வடக்கில் மாவீரர்தின நிகழ்வுகளை ஏற்பாடு செய்யும் தரப்பினருக்கு அறிவித்துள்ளனர்.

இந்த அறிவிப்பை மீறும் எந்தவொரு நபரையும் கைதுசெய்து சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

வடக்கில் ஒவ்வொரு வருடமும் நவம்பர் 26 ஆம் திகதி மாவீரர் தினம் நினைவு கூரப்படுகிறது. வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மங்கைகொடி குளத்தை புனரமைத்து தருமாறு மக்கள் கோரிக்கை விடுப்பு!



வவுனியா மன்னகுளம் கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நீண்ட காலமாகக் கைவிடப்பட்ட நிலையில் உள்ள மங்கைகொடி என்ற குளத்தை புணரமைத்து தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை முன்வைக்கின்றனர்.

180 குடும்பங்கள் வாழும் கொல்லர் புளியங்குளத்துக்கு பின்புறமாக அமைந்துள்ள மங்கை கொடி என்ற குளம் சுமார் 40 வருடங்களுக்கு முன்னர் உடைப்பெடுத்தமையால் திருத்தப்படாமல் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டது.

எனினும் இந்தக் கிராம மக்கள் 1996 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து மேற்படி குளத்தை திருத்தம் செய்து தருமாறு கோரிய போதிலும் அது நிறைவேறாத நிலையில் பல அமைச்சர்கள் வட மாகாண சபை மற்றும் அபிவிருத்தி குழு கூட்டங்களிலும் கோரிக்கை முன்வைத்திருந்தனர்.

இதன் காரணமாக எவ்வித பலனும் கிடைக்காத நிலையில் இம்மக்கள் ஓர் ஏக்கர் வயல் நிலம் கூட இன்றி காணப்படுவதால் தமக்கு குளத்தைத் திருத்தம் செய்து தரும் பட்சத்தில் அதன் கீழ் 360 ஏக்கர் வயல் நிலைத்தைத் துப்புரவு செய்து குடும்பத்துக்கு இரண்டு ஏக்கர் என்ற வீதத்தில் விவசாயம் செய்ய முடியும் எனவும் தெரிவிக்கின்றனர்.

விவசாயத்தையே அடிப்படையாக கொண்ட இந்தக் கிராம மக்கள் தமது வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டு மங்கைகொடி குளத்தைத் திருத்தம் செய்து தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

## வடக்கு கிழக்கு சிவில் சமூகத்தினரால் முன்னெடுக்கப்படும் 100 நாள் செயல் முனைவின் இறுதிநாள் நேற்று நடந்தது!





வடக்கு கிழக்கு சிவில் சமூகத்தினரால் முன் னெடுக்கப்படும் 100 நாள் செயல் முனைவின் இறுதி நாள் நிகழ்வு கிளிநொச்சியில் நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்றது.

வடக்கு கிழக்கு மக்களின் அடிப்படை உரிமைகளை பெற்றுத் தர வேண் டும் என்ற 100 நாள் செயலமர்வு வடக்கு கிழக்கு ஒருங்கணைப்பு குழுவின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டு வந்தது. அதன் இறுதி நாளான நேற்று வடக்கு கிழக்கு தழுவி நேற்று காலை 10.30 மணிக்கு இடம்பெற்றது.

பெண்கள் வாழ்வுரிமைக்கழகத்தின் பணிப்பாளர் வாசுகி வல்லிபுரம் தலைமையில் பரந்தன் விளையாட்டு மைதானத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது, பொதுச் சுடர் ஏற்றப்பட்டு, 100 நாள் செயல்முனைவின் கொள்கைப் பிரகடனம் வாசிக்கப்பட்டது.

## தனிநபர்களுக்கான புதிய வருமான வரி விதிகள் டிசெம்பர் முதல் அமுல்!

உள்நாட்டு இறைவரித் திருத்தச் சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, தனிநபர்களுக்கான புதிய வருமான வரி விதிகள் டிசெம்பர் மாதம் முதல் அமுலுக்கு வர உள்ளன.

முன்னதாக புதிய வரிச் சட்டங்கள் ஒக்ரோபர் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் என்று கூறப்பட்டிருந்தது. இந்தநிலையில், புதிய சட்டமூலத்தை சவாலுக்கு உட்படுத்தி அரசமைப்பின் 120 மற்றும் 121 ஆவது சரத்துகளின் கீழ் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பல மனுக்கள் மீதான விசாரணையின் போது அட்டர்னி ஜெனரல் வழங்கிய உறுதிமொழி காரணமாகவே இந்த மாற்றம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# நட்டத்தில் இயங்கிவருகின்ற அரச நிறுவனங்களை இணக்கப்பாட்டுடன் தனியார் மயப்படுத்தவேண்டும்!

## ஐக்கிய தேசிய கட்சி லிபரல் இளைஞர் அமைப்பு கோரிக்கை

நட்டமடைந்து வரும் அரச நிறுவனங்களுக்கு தொடர்ந்தும் பணம் மூதலீடு செய்வதால் அத்தியாவசிய சேவைகளுக்கு போதுமான நிதி ஒதுக்கீடுகளை செய்ய முடியாமல் இருக்கின்றது. அதனால் அரசாங்கம் இணக்கப்பாட்டுடன் அவ்வாறான நிறுவனங்களை தனியார் மயமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். அத்துடன் அந்த நடவடிக்கைக்கு நாடாளுமன்றத்தில் யாரும் எதிர்ப்பு தெரிவிக்கக்கூடாது என ஐக்கிய தேசிய கட்சி லிபரல் இளைஞர் அமைப்பு தெரிவித்தது.

ஐக்கிய தேசிய கட்சி லிபரல் இளைஞர் அமைப்பு கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அதன் மேல்மாகாண தலைவர் இந்திக்க புஷ்பகுமார தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

நாட்டை ஆட்சி செய்துவந்த அரசாங்கங்கள் அரச நிறுவனங்களை லாபமீட்டும் நிறுவனங்களாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தபோதும் சில நிறுவனங்கள் தொடர்ந்தும் நட்டத்திலேயே இருந்து வருகின்றன. அவ்வாறான நிறுவனங்களுக்கு அரசாங்கம் பாரியளவில் தொடர்ந்து பணம் முதலீடு செய்து வருகின்றபோதும் லாபமீட்டும் நிறுவனங்களாக மாற்ற முடியாமல் இருக்கின்றன. அதனால் இவ்வாறான நிறுவனங்கள் தொடர்பில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

குறிப்பாக சிறிலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனம் பாரியளவில் நட்டத்திலேயே தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றது. அந்த நிறுவனத்துக்காக வருடாந்தம் பாரியதொரு தொகை ஒதுக்கப்படுகின்றது. இவ்வாறு நட்டமடைந்து வரும் நிறுவனங்களுக்கு அரசாங்கம் பாரியளவில் நிதி ஒதுக்கி வருவதால், நாட்டின் அத்தியாவசிய துறைகளான கல்வி. சுகாதாரம் போன்றவற்றுக்கு போதுமான நிதியை செலவழிக்க முடியாமல் இருக்கின்றது.

அதனால் நாட்டின் முக்கிய நிறுவனங்களை மாத்திரம் அரசாங்கத்துக்கு கீழ் வைத்துக்கொண்டு, ஏனைய நட்டமைந்துவரும் நிறுவனங்களை முறையான இணக்கப்பாட்டுடன் தனியாருக்கு வழங்குவதே தற்போது செய்ய வேண்டிய விடயமாகும். ஏனெனில் நாடு பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் தொடர்ந்தும் இவ்வாறான நிறுவனங்களுக்கு நிதி ஒதுக்குவதில் எந்த பிரயோசனமும் இல்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இதுதொடர்ப்பில் கவனம் செலுத்தி வருகின்றமையை நாங்கள் காண்கின்றோம்.

அத்துடன் நட்டமடைந்து வரும் அரச நிறுவனங்களை இணக்கப்பாட்டுடன் தனியாருக்கு வழங்குவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கும்போது, அதற்கு நாடாளுமன்றத்தில் அனைத்து கட்சி உறுப்பினர்களும் ஆதரவளிக்க வேண்டும் என்றே நாங்கள் கேட்கின்றோம். மேலும் வீழ்ச்சியடைந்திருக்கும் நாட்டைக் கட்டியெழுப்ப ஜனாதிபதி படிப்படியாக நடவடிக்கை எடுத்து வருகின்றார். அவர் எந்த நடவடிக்கை எடுத்தாலும் அதற்கு பிரதானமாக அரசாங்கத்தில் இருக்கும் பொதுஜன பெரமுன கட்சிகளின் ஆதரவு தேவைப்படுகின்றது. ஏனெனில் ஜனாதிபதிக்கு நாடாளுமன்றத்தில் ஓர் ஆசனம் மாத்திரமே இருக்கின்றது.

எனவே நாட்டைக் கட்டியெழுப்ப ஜனாதிபதி எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு அனைத்து கட்சிகளும் ஆதரவளிக்க வேண்டும். ஜனாதிபதியின் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்த அவருக்கு இரண்டு வருடங்களாவது வழங்கவேண்டும். – என்றார்.

# அரசாங்கத்தின் சதித்திட்டங்களுக்கு மஹிந்த உடந்தையாகிவிடக் கூடாது!

## தயாசிறி ஜயசேகர உருக்கம்

முன்னாள் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய மீது மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர். எனவே, தேர்தலைக் காலம் தாழ்த்துவதற்கு அரசாங்கம் முன்னெடுத்துள்ள சதித்திட்டத்தின் பங்காளியானால், அவரது நற்பெயருக்கு கலங்கம் ஏற்படும். இந்த சதித்திட்டத்துக்கு மஹிந்த தேசப்பிரிய உடந்தையாகிவிடக் கூடாது என்று ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

எல்லை நிர்ணய குழுவின் தலைவராக முன்னாள் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய நியமிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அவர் மேலும் குறிப்பிடுகையில் –

முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய மீது நாட்டு மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

தேர்தல்கள் காலம் தாழ்த்தப்படுவதற்கு அவர் கடும் எதிர்ப்பை வெளியிட்ட ஒருவராவார். எனவே, உள்ளூராட்சி மன்றத் தேர்தலை காலம் தாழ்த்துவதற்கு அரசாங்கம் முன்னெடுக்கும் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டாம் என்று அவரிடம் கேட்டுக்கொள்கின்றோம்.

தேர்தலைக் காலம் தாழ்த்துவதற்கு அரசாங்கம் முன்னெடுத்துள்ள சதித்திட்டத்தின் சதிகாரராகிவிடாமல், அவர் மீது மக்கள் கொண்டுள்ள மரியாதையையும் நம்பிக்கையையும் பாதுகாத்துக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மாறாக, இதில் அவரது பங்களிப்பும் காணப்படுமாயின், இதுவரை காலமும் பேணி பாதுகாத்த அவரது நற்பெயருக்கும் கலங்கம் ஏற்படும்.

நாம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எந்த தேர்தலுக்கும் தயாராகவே உள்ளோம். எதிர்காலத்தில் இடம்பெறவுள்ள எந்தவொரு தேர்தலையும் எதிர்கொள்வதற்கான தயார்ப்படுத்தல்களில் சுதந்திர கட்சி ஈடுபட்டு வருகிறது. அதன் காரணமாகவே தொகுதிகளைப் பலப்படுத்தும் நோக்கில் மாநாடுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. – என்றார்.



# அரசாங்கத்துக்குள் அதிகாரப் போராட்டங்கள்; அமைச்சுப் பதவிக்கு இணங்காமையால் குழப்பம்!

## சமநிலைப்படுத்த ஜனாதிபதி முயற்சி என்கிறார் சன்ன ஜயசுமன



அரசாங்கத்திற்குள் உள்ளக அதிகார போராட்டம் இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது. பொதுஜன பெரமுனவினர் சிலருக்கு அமைச்சுக்களை வழங்குவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இணக்கம் தெரிவிக்காத நிலையில், அரசாங்கத்தை அசௌகரியத்துக்கு உள்ளாக்கும் செயற்பாடுகளில் அந்தத் தரப்பினர் ஈடுபட்டு வருகின்றனர் என நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

இந்நிலைமையை சமநிலைப்படுத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றார்.

எனினும் அவரது முயற்சியின் வெற்றியை வரவு – செலவு திட்ட வாக்கெடுப்பின் போது தெரிந்து கொள்ள முடியும் என்றும் சன்ன ஜயசுமன சுட்டிக்காட்டினார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

எல்லை நிர்ணயத்துக்காக நடவடிக்கைகளை முன்னெடுப்பதன் மூலம் உள்ளூராட்சி தேர்தலை காலம் தாழ்த்துவதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றமை தெளிவாகிறது. அரசாங்கத்தின் இந்த முயற்சியை தோல்வியடையச் செய்வதற்கான சகல நடவடிக்கைகளையும் நாம் முன்னெடுப்போம்.

சுதந்திர மக்கள் சபையின் ஒருங்கிணைப்பின் கீழ் இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம். இதன் முதற்படியாக பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ்னுடைய தலைமையில் சட்டத்தரணிகள் குழுவால் இதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

உள்ளூராட்சி தேர்தல்களைக் காலம் தாழ்த்துவதற்கு அரசாங்கம் முன்னெடுத்துள்ள முயற்சிகளை நீதிமன்றத்தின் ஊடாகத் தோல்வியடையச் செய்வதற்கான, சட்ட நடவடிக்கைகளை விரைவில் ஆரம்பிப்போம். அத்தோடு நீதிமன்றத்துக்கு அப்பால் பொது மக்களுக்கு இது தொடர்பில் விழிப்புணர்வூட்டுவதோடு, அவர்களை ஒன்றிணைந்து மக்கள் சக்தியொன்றையும் உருவாக்குவோம்.

அரசாங்கத்துக்குள் உள்ளக அதிகார போராட்டம் இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது. ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவிலுள்ள மாவட்ட தலைவர்கள் உள்ளிட்ட பிரபல குழுவினருக்கு , அமைச்சுப்பதவிகளை வழங்குவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இணக்கம் தெரிவிக்கவில்லை என்று தெரியவந்துள்ளது. எனவே, இவ்வாறானவர்கள் அரசாங்கத்தை உள்ளக ரீதியில் அசௌகரியத்துக்கு உள்ளாக்குவதற்கு முயற்சிக்கின்றனர்.

இதேவேளை மறுபுறம், எதிர்க்கட்சியிலுள்ள சிலரை அரசாங்கத்துக்குள் உள்வாங்குவதற்கான முயற்சிகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்து வருகின்றார். அத்தோடு மேற்கூறப்பட்ட தரப்பினருக்கு அமைச்சரவை அமைச்சுக்கள் வழங்கப்பட்டால், பிரிதொரு தரப்பினர் அரசாங்கத்திலிருந்து வெளியேறுவதற்கு தயாராக உள்ளனர்.

இதே போன்று எதிர்க்கட்சியிலிருந்து அரசாங்கத்துடன் இணையவுள்ளவர்களுக்கு அமைச்சுப்பதவிகளை வழங்கினால் , தற்போது அரசாங்கத்தில் அங்கத்துவம் வகிப்பவர்கள் பதவி விலகுவதாக அறிவித்துள்ளனர்.

இந்த நிலைமையை சமநிலைப்படுத்துவதற்கு ஜனாதிபதி முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றார். வரவு – செலவு திட்ட வாக்கெடுப்பின் போது ஜனாதிபதியின் முயற்சி எந்தளவிற்கு வெற்றியளித்துள்ளது என்பதைப் பார்க்க முடியும்.

இவற்றுக்கு மத்தியிலேயே தேர்தலைக் காலம் தாழ்த்துவதற்கான முயற்சிகளும் முன்னெடுக்கப்படுகின்றன. இந்த இரண்டு முயற்சிகளினதும் விளைவாக இறுதியில் இரு தேர்தல்களையும் நடத்த வேண்டிய நிலைமைக்கு அரசாங்கம் தள்ளப்படும். அரசாங்கத்தின் ஸ்திரமற்ற நிலைமையே இதன் மூலம் வெளிப்படுகிறது. – என்றார்.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# பொதுஜனபெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்கள் நாடாளுமன்றில் சுயாதீனமாக செயற்படுவார்கள்!

## நாலக கொடஹேவா தெரிவிப்பு



2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் ஐக்கிய மக்கள் சக்தியின் பெரும்பாலான உறுப்பினர்கள் நிலையான அமைச்சரவையில் அமைச்சு பதவிகளை பெற்றுக் கொள்வார்கள்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படுவார்கள். அரசாங்கத்தின் உள்ளக பிரச்சினை பொருளாதார நெருக்கடியை மேலும் தீவிரப்படுத்தும் என நாடாளுமன்ற உறுப்பினர் நாலக கொடஹேவா தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான பொதுஜன பெரமுனவின் அரசாங்கத்தின் உள்ளக பிரச்சினை நாளுக்கு நாள் தீவிரமடைந்து உள்ளது. அரசாங்கத்தின் உள்ளகப் பிரச்சினைகள் தற்போதைய பொருளாதார நெருக்கடியை மேன்மேலும் தீவிரப்படுத்தும்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஒரு சில சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு அமைச்சு பதவி வழங்குவதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மறுத்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களுக்கு அமைச்சு பதவிகள் மறுக்கப்படுவதால் கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்கள் ஜனாதிபதியின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்கள்.

2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 14ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளார். இதனைத் தொடர்ந்து நிலையான அமைச்சரவையை ஸ்தாபிக்க ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பெரும்பாலான உறுப்பினர்கள் நிலையான அமைச்சரவையில் அமைச்சு பதவிகளைப் பெற்றுக்கொள்வார்கள் மறுபுறம் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஒரு சில சிரேஷ்ட உறுப்பினர்கள் அரசாங்கத்தில் இருந்து விலகி நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படுவார்கள்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான பொதுஜன பெரமுன அரசாங்கத்தின் உள்ளக பிரச்சினைகளால் தற்போதைய பொருளாதார நெருக்கடி மேலும் தீவிரமடையும். வரவு – செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் அரசியலில் பல திருப்புமுனையான சம்பவங்கள் இடம்பெறும்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு கானல் நீராக காணப்படுகிறது. கடன் மறுசீரமைப்பு தொடர்ந்து தாமதப்படுத்தப்பட்ட நிலையில் காணப்படுகிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் ஊழியர் மட்ட நிபந்தனைகளை அரசாங்கம் இதுவரை செயற்படுத்தவில்லை. ஊழல் மோசடிக்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் அரச கொடுக்கல் வாங்கல்களில் மோசடி தவிர்க்கப்படவில்லை. – என்றார்.

# பொது நிறுவனங்களை தனியார்மயமாக்குவதற்கான திட்டங்கள் வரவு - செலவுத் திட்டத்தில் உள்ளடக்கம்?

2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத்திட்டத்தில் அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களை தனியார்மயமாக்குவதற்கான முக்கிய திட்டங்களை அரசாங்கம் அறிமுகப்படுத்தவுள்ளதாக ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தை எதிர்வரும் 14 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் விவாதத்துக்காக சமர்ப்பிக்கவுள்ளார்.

இது முதன்மையாக சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்துக்கு இணங்க பொருளாதார சீர்திருத்தங்களைச் செயற்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட வரவு –செலவுத்திட்டமென தெரிவிக்கப்படுகிறது.

தனியார் துறையின் பங்களிப்புடன் அபிவிருத்திக்காக சுமார் 40 அரச நிறுவனங்களை அரசாங்கம் அடையாளம் கண்டுள்ளதாக அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றில், சுமார் பத்து நிறுவனங்களை உடனடியாகத் தனியார்மயமாக்கி அபிவிருத்தி செய்ய அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அவற்றில் ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் மற்றும் பெற்றோலிய பொருள்கள் விநியோகம் ஆகியவை அடங்கும் என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குரங்குக் காய்ச்சல் தொற்றுக்குள்ளான பலர் வெளிநாடுகளில் இருந்து நாடு வரும் அபாயம்!

## சுகாதார அமைச்சு அச்சம் தெரிவிப்பு

உலகின் ஏனைய நாடுகளில் பரவி வரும் குரங்குக் காய்ச்சல் தொற்றுக்குள்ளான நோயாளர்கள் பலர் வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு வரும் அபாயம் உள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சூம் தொழிநுட்பத்தினூடாக இடம்பெற்ற குரங்குக் காய்ச்சல் தொடர்பான விசேட கலந்துரையாடலின்போது உரையாற்றிய சுகாதார அமைச்சின் தொற்றுநோய் பிரிவின் நிபுணர் வைத்திய கலாநிதி சிந்தன பெரேரா, வெளிநாடுகளில் இருந்து அறிகுறியற்ற நோயாளர்கள்கூட இலங்கைக்கு வரமுடியும் எனவும் தெரிவித்தார்.

இலங்கையில் அடையாளம் காணப்பட்ட நோயாளரை சிறப்பாக நிர்வகித்து, அவரை சிகிச்சைக்காக அரசாங்க வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஆனால் இதுபோன்ற நோயாளிகள் அதிகம் வரும் அபாயம் உள்ளதென்றும் இந்த நோய் உலகின் ஏனைய பகுதிகளில் இன்னும் இருப்பதால், ஒரு கட்டத்தில் அதிகமான தொற்றுக்கள் பரவக்கூடும் என்றும் அவர் எச்சரித்தார். தற்போது அறிகுறியுடன் அடையாளம் காணப்பட்ட ஒருவர் சிகிச்சை பெற்று வரும் நிலையில், சில நேரங்களில் அறிகுறியற்ற நோயாளிகள் கூட இலங்கைக்கு வரலாம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். சிலருக்கு அறிகுறிகள் இல்லாமல் இருக்கலாம். எனவே நமது அனைத்து சுகாதார அதிகாரிகளும் சமூக மருத்துவ பிரிவுகளும் இந்த விடயத்தில் கவனம் செலுத்துவது மிகவும் அவசியம் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை, குரங்குக் காய்ச்சலைக் கட்டுப்படுத்துவதற்கு தடுப்பூசி போட வேண்டிய அவசியம் தற்போது இல்லை என சுகாதார அமைச்சின் பொது சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் வைத்திய கலாநிதி மகேந்திர ஆனந்த் தெரிவித்துள்ளார்.

# உணவுத் தேவைகளை மதிப்பிடுவதற்காக அனைத்து நாடுகளின் விவசாய அமைச்சர்களின் கூட்டத்துக்கு ஜனாதிபதி அழைப்பு!



2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுக்கான உணவுத் தேவைகளை மதிப்பிடுவதற்கும், உணவு நிலைமை தொடர்பான அறிக்கையை சமர்ப்பிப்பதற்கும் அனைத்து நாடுகளின் அனைத்து விவசாய அமைச்சர்களின் கூட்டத்தை கூட்ட வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர், சி.ஓ.பீ. 27 இன் தலைவர் என்ற முறையில் ஐ.நா மற்றும் எகிப்தின் செயலாளர் நாயகத்திடம் வலியுறுத்தியுள்ளார்.

எகிப்தின் ஷர்ம் எல் ஷேக் நகரில் நடைபெற்று வரும் காலநிலை மாற்றம் தொடர்பான மாநாட்டில் உணவு பாதுகாப்பு தொடர்பான வட்டமேசை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

உலகளாவிய உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, பலதரப்பு மற்றும் நிதி ஆதாரங்களுடன் நெருக்கமாகச் செயற்பட வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி இதன்போது வலியுறுத்தியுள்ளார்.

2023 பெப்ரவரிக்குள் இந்தத் திட்டத்தை இறுதி செய்வது அவசியமானது எனவும் 2023 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டின் இறுதிக்குள் இது அமுல்படுத்தப்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இல்லையெனில் நாடுகளின் அரசியல் மற்றும் சமூக கட்டமைப்புகளுக்கு ஏற்பட்டுள்ள சேதத்தை ஈடுசெய்ய முடியாததாக இருக்கும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

காலநிலை மாற்றம் தொடர்பான மாநாட்டில் உலகளாவிய உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான ஒரு நடுத்தர காலத் திட்டத்தைத் தொகுக்க வேண்டிய அவசரத் தேவையையும் அவர் இதன்போது எடுத்துரைத்துள்ளார்.

# மாணவர்கள் சீருடையில் மாற்றம் இல்லை கல்வி அமைச்சர் சுசில் நேற்று விளக்கம்!



மாணவர்களின் சீருடையை கல்வி அமைச்சு ஒருபோதும் மாற்றாது என கல் வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

நேற்று (செவ்வாய்க்கிழமை) நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தின் போதே கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஆசிரியர்களுக்கான சேலையை மாற்றுவது தொடர்பாக எந்த முடிவும் எடுக்கப்படாது என்றும் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

# கடவுச்சீட்டு விநியோகத்தில் தாமதம் கட்டமைப்புக் கோளாறே காரணமாம்!

கட்டமைப்பில் ஏற்பட்ட கோளாறு காரணமாக கடவுச்சீட்டுகள் விநியோகிக்கும் நடவடிக்கை தாமதமடைந்துள்ளதாகக் குடிவரவு மற்றும் குடியகல்வுத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடவுச்சீட்டு பெறுவதற்கான விண்ணப்பங்கள் மறு அறிவித்தல் வரை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா என திணைக்களம் தெரிவித்துள்ளது.

கட்டமைப்பை வழமைக்குக் கொண்டு வரும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாக திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் பியுமி பண்டார தெரிவித் துள்ளார்.

# கந்தகாடு கலவரச் சம்பவங்கள்; 201 கைதிகளுக்கு விளக்கமறியல்!

## விசாரணைகளுக்காக ஐவர் அடங்கிய குழு நியமனம்

கந்தகாடு புனர்வாழ்வு மத்திய நிலையத்தில் இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்காக சிரேஷ்ட அதிகாரிகள் ஐவர் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இந்த குழுவினூடாக தயாரிக்கப்படும் அறிக்கை, நீதி அமைச்சருக்கு வழங்கப்படவுள்ளதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம், மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கந்தகாடு சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு நிலையத்தில் இடம்பெற்ற கலவரச் சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட 201 கைதிகளை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

பொலன்னறுவை நீதிவான் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

கந்தகாடு சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு நிலையத்தில் இடம்பெற்ற சம்பவத்தின் பின்னர் 514 கைதிகள் பாதுகாப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர் என புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் தர்ஷன் ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

மேலும் அமைதியின்மையின் போது தப்பிச்சென்ற 33 கைதிகளை தேடும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ரவீ ஹேரத் தெரிவித்தார்.



# எரிபொருளைத் தவிர்த்து பசுமை வளர்ச்சிக்கு இந்தியா – சவூதி கூட்டு முயற்சித் திட்டங்கள்

டிசெம்பர் 2022 இல் தொடங்கி ஒரு வருடத்திற்கு 'ஜி இருபது' (G20) நாடுகள் குழுமத்தின் தலைமையை இந்தியா பொறுப்பேற்க் இருக்கும் சமயத்தில் சவூதி அரேபியாவின் பட்டத்து இளவரசரும் பிரதமருமான முகமது பின் சல்மான் அல் சவூதின் வரவிருக்கும் புது தில்லி விஜயம் முக்கியத்துவம் பெறுகிறது.

இந்தியாவைப் பொறுத்தவரை, ஜி20 நாடுகள் குழுமத்தின் தலைமை என்பது உலகளாவிய தடயங்களை ஆழப்படுத்துவதற்கும், உலக ஒழுங்கிற்கான பகிரப்பட்ட அமைதி மற்றும் செழிப்புக்கான அதன் உறுதிப்பாட்டை உறுதிப்படுத்துவதற்கும் ஒரு திருப்புமுனையாகும். குறிப்பாக அது சுற்றுச்சூழல் கவலைகளையும் முன்னிலைப்படுத்துகிறது.

தற்போது, நிலையான வளர்ச்சி அல்லது அபிவிருத்தி பற்றிய கேள்வி உலகின் மையநிலைக்கு வந்துள்ளது. புதைபடிவ எரிபொருள் வளங்கள் குறைந்து, வேகமாகச் சுரண்டுவதற்குப் பொருளாதாரமற்றதாகி வருகின்றன். 'பசுமை வளர்ச்சிக்கு' தற்போதைய தலைமுறையின் அவசரம், அதாவது, பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்யும் அதே வேளையில், கார்பன் தடயங்களைக் குறைப்பதும் முக்கியமானதாகும்.

இந்தியாவும் சவுதி அரேபியாவும் எரிசக்தி வர்த்தகத்தில் சிறந்த பங்காளிகளாக இருந்தாலும், பசுமை வளர்ச்சியின் தற்போதைய உந்துதல், பாதுகாப்பு மற்றும் பசுமை தொழில்நுட்ப அடிப்படையிலான எரிசக்தி ஆகியவற்றில் உலக நாடுகளிடையே ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கு அழைப்பு விடும் நிலைமை உள்ளது. இந்த பகுதியில் சவுதி அரேபியா – இந்தியா ஒத்துழைப்புக்கு பரந்த வாய்ப்பு உள்ளது.

உலகளவில் ஆற்றல் நுகர்வு 2018 இல் 2.3 சதவீதம் அதிகரித்துள்ளது. இது, 2010 முதல் சராசரி வளர்ச்சி விகிதத்தை விட இரண்டு மடங்கு அதிகரித்துள்ளது. இப்போது அது அதே வளர்ச்சி விகிதத்தை பராமரிக்கிறது.

நமது தற்போதைய விகிதத்தில் நாம் புதைபடிவ எரிபொருள்களை எரித்துக்கொண்டே இருந்தால், 2060 ஆம் ஆண்டளவில் நமது அனைத்து புதைபடிவ எரிபொருள்களும் தீர்ந்துவிடும் என்று பொதுவாக மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும், 2050 க்குள் புவி வெப்பமடைதலை ஒப்பீட்டளவில்' பாதுகாப்பான அளவான 2oC ஆகக் கட்டுப்படுத்த உலகம் முயற்சித்தால், நிலக்கரியின் 80 சதவீதம், எரிவாயு 50 சதவீதம் மற்றும் எண்ணெய் இருப்புகளில் 30 சதவீதம் 'எரிக்க முடியாதவை' ஆகிவிடும். இதனுடன், எண்ணெய் கிடைப்பது குறையும் என்பதால், அதன் அகல்வு மற்றும் உற்பத்தி மிகவும் விலை உயர்ந்ததாக இருக்கும்.

எனவே, இந்தத் தெளிவு வெளிச்சத்தில் ஆற்றல் ஒத்துழைப்பின் பிரச்சினை மிகவும் முக்கியமானது.

சவூதி அரேபியா, எரிசக்தியின் முக்கிய விநியோகஸ்தர். மற்றும் இந்தியா ஒரு முக்கியமான நுகர்வோர். எனவே இவை இரண்டும் மிகவும் திறமையான ஆற்றல் உற்பத்தி மற்றும் பயன்பாட்டிற்கு சுமூகமான மாற்றத்திற்கு ஒரு எடுத்துக்காட்டு.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, தொழில்நுட்பம், குறிப்பாக சூரிய சக்தி மற்றும் காற்றாலை ஆற்றல் போன்றவற்றை மேம்படுத்த இந்தியா முயற்சித்து வரும் நிலையில், இரு நாடுகளுக்கும் இடையே ஒத்துழைப்புக்கு நிறைய வாய்ப்புகள் உள்ளன.

இந்தியா ஒரு முக்கிய ஆசிய சுத்திகரிப்பு மையமாக உள்ளது. 23 சுத்திகரிப்பு நிலையங்களில் ஆண்டுக்கு கிட்டத்தட்ட 250 மில்லியன் டன்கள் நிறுவப்பட்ட திறன் கொண்டது, 2025 ஆம் ஆண்டுக்குள் இதை 400 மில்லியன் டன்கள் ஆக உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது. சவுதி எண்ணெயின் முக்கிய இறக்குமதியாளராக, இந்தியா நீண்ட காலமாக வர்த்தகம் மற்றும் எரிசக்தி ஒத்



துழைப்பைக் கொண்டுள்ளது. மேலும், உலகிலேயே அதிக மக்கள்தொகை கொண்ட மற்றும் மனித வளம் நிறைந்த நாடுகளில் ஒன்றாக விளங்கும் இந்தியா, சவுதி அரேபியாவுக்கு ஒத்துழைப்பை விரிவுபடுத்துவதற்கான வாய்ப்பை வழங்குகிறது.

சவுதி அரேபியாவும் இந்தியாவுடனான ஒத்துழைப்பை மேம்படுத்த புதிய வழிகளைத் தேடுகிறது. பசுமை எரிசக்தி ஆதாரங்களில் இருந்து அதிகரித்து வரும் உலகளாவிய எரிசக்தி தேவையை பூர்த்தி செய்வது பல காரணங்களுக்காக சர்வதேச சமூகத்திற்கு சவாலாக உள்ளது. சவூதி அரேபியா தனது ஆற்றலில் 50 சதவீதத்தை 2030 ஆம் ஆண்டிற்குள் சுத்தமான மூலங்களிலிருந்து உற்பத்தி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

கடந்த ஆண்டு, ஐ.நாவின் சர்வதேச காலநிலை



உச்சிமாநாட்டிற்கு முன்னதாக, ரியாத் 2060 ஆம் ஆண்டுக்குள் நிகர பூஜ்ஜிய(காபன்) உமிழ்வை அடைவதாக உறுதியளித்தது. ஆயினும், இது சுற்றுச்சூழல் பிரச்சாரகர்களிடமிருந்து சந்தேகத்தை எழுப்பியது.

உலகின் மிகப்பெரிய எண்ணெய் ஏற்றுமதியாளரிடமிருந்து பொருளாதாரத்தை பன்முகப்படுத்துவதற்கான பரந்த உந்துதலின் ஒரு பகுதியாக, ரியாத் தனது முதல் பிராண்ட் மின்சார வாகனங்களை அறிமுகப்படுத்துவதாக மிக சமீபத்தில் அறிவித்தது.

எரிசக்தித் துறைகளில் ஒத்துழைக்க இந்தியாவுடன் புரிந்துணர்வு வரைவு ஒப்பந்தம் ஒன்றை சவூதி அமைச்சர்கள் குழு சமீபத்தில் விவாதித்தது. இதில் இருந்து அதிகரித்த இருதரப்பு ஈடுபாட்டைக் காணலாம். இது இந்திய ஆற்றலைப் பயன்படுத்தும் ரியாத்தின் ஆர்வத்தின் அறிகுறியாகும். இரு நாடுகளின் தனியார் கூட்டாளிகளும் புதுப்பிக்கத்தக்க அல்லது மாற்று எரிசக்தி போன்ற புதிய துறைகளில் ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றனர்.

இது சம்பந்தமாக, சவுதி அரேபியாவின் Tdafoq எனர்ஜி பார்ட்னர்ஸ் மற்றும் இந்தியாவின் டெலெக்ட்ரிக் சிஸ்டம்ஸ் வளைகுடா ஒத்துழைப்பு கவுன்ஸில் நாடுகளில் Delectrik இன் Vanadium Redox Flow Battery தயாரிப்புகளுக்கான விநியோகம் மற்றும் உற்பத்தி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. ஒப்பந்தத்தின் கீழ், Tdafoq ராஜ்ஜியத்தில் ஒரு ஃப்ளோ பேட்டரி உற்பத்தி ஆலையை அமைக்கும். இது 2025 ஆம் ஆண்டளவில் ஒரு GWh திறனுக்கு அளவிடப்படும். Delectrik's Vanadium Flow Batteries குடியிருப்பு, வணிகம், தொழில்துறை மற்றும் கட்டம் அளவிலான நிலையான ஆற்றலில் சேமிப்பு பயன்பாடுகளை உபயோகிக்க வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்தியா சர்வதேச சூரியசக்தி (சோலார்) கூட்டணியின் ஸ்தாபக உறுப்பினராக இருந்து வருகிறது. மேலும் காலநிலை பேரழிவிலிருந்து இந்த புதிய எல்லையின் மூலம் உலகைக் காப்பாற்ற நாடு உறுதிபூண்டுள்ளது. புது தில்லி ஒரு உலகளாவிய மின்சாரக் கட்டத் திட்டமான 'ஒரே சூரியன்; ஒரே உலகம்; ஒரே சுற்று இணைப்பு' (OSOWOG) என்ற திட்டத்தையும் வென்றுள்ளது. இது ஒரு புதுமையான திட்டமாகும்.

ஜி20 குழும நாடுகளின் தலைமைப் பதவியை ஏற்றுக்கொள்வதை அடுத்து, இந்திய வெளியுறவு அமைச்சகம் வளர்ச்சியின் பாரம்பரிய எல்லைகளைத் தொட்டுவோர் அறிக்கையை வெளியிட்டது. அது உள்ளடக்கிய அறிக்கை என்னவென்றால், எங்கள் ஜி20 முன்னுரிமைகள் உறுதிப்படுத்தப்படும் நிலையில், நடப்பு உரையாடல்கள் உள்ளடக்கிய, சமமான மற்றும் நிலையான வளர்ச்சியைச் சுற்றி வருகின்றன; வாழ்க்கை (சுற்றுச்சூழலுக்கான வாழ்க்கை முறை); பெண்களின் அதிகாரமளித்தல்; டிஜிற்றல் பொது உள்கட்டமைப்பு மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த மேம்பாடு சுகாதாரம், விவசாயம் மற்றும் கல்வியில் இருந்து வணிகம், திறன் அடையாளம் காணல், கலாச்சாரம் மற்றும் சுற்றுலா வரையிலான பகுதிகள்; காலநிலை நிதி, சுற்றுஒ பொருளாதாரம்; உலகளாவிய உணவு பாதுகாப்பு; ஆற்றல் பாதுகாப்பு; பசுமை ஹைட்ரஜன்; பேரழிவு அபாயத்தைக் குறைத்தல் மற்றும் மீள்தன்மை; வளர்ச்சி ஒத்துழைப்பு; பொருளாதார குற்றங்களுக்கு எதிரான போராட்டம்; மற்றும் பலதரப்பு சீர்திருத்தங்கள். – என அமைந்தது.

ஒரு குடும்பமாக உலகில் அமைதியான சகவாழ்வை நம்புதல் என்ற முறையில், யாரையும் தவிர்த்து (வசுதைவ குடும்பகம்), தெற்காசியாவிலும் உலகிலும் இந்தியாவின் தலைசிறந்த நிலை, போட்டி அணுகுமுறைக்கு பதிலாக உலகளாவிய முன்னேற்றத்திற்கான கூட்டு அணுகுமுறையை உலகிற்கு இந்தியா தூண்டுகிறது.

இந்தியாவின் 'ஜி இருபது' நாடுகள் குழுமத்தின் தலைமை சரியான நேரத்தில் உள்ளது. அத்தோடு தற்போதைய சூழ்நிலையின் அழுத்தமான சவால்களுக்கு உலகம் பதிலளிக்கும் விதத்தை குறிப்பிடத்தக்க வகையில் வடிவமைப்பதில் நீண்ட தூரம் செல்லும்.

ரஷ்யா – உக்ரைன் மோதலினால் எரிசக்தி விலைகளில் நடந்து வரும் தாக்கத்தைத் தணிப்பதுடன், சுற்றுச்சூழல் சவால்களைச் சமாளிக்க, அறியப்படாத பிரதேசங்களைச் சென்றடைவதற்கு கிடைக்கக்கூடிய வளங்களைப் பயன்படுத்துவது இந்தியாவின் பொறுப்பு.

இந்தியா தற்போது உலகின் மிகப்பெரிய ஆற்றல் மாற்றத்தை மேற்கொள்கிறது. அத்தோடு மிகப்பெரிய தூய்மையான எரிசக்தி திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. மேலும் 2070 ஆம் ஆண்டுக்குள் நிகர – பூஜ்ஜிய கார்பன் உமிழ்வை உறுதி செய்கிறது. புதிய துறைகளில் சவுதி – இந்தியா ஒத்துழைப்பு நிச்சயமாக அமைதியான உலக வளர்ச்சி மற்றும் பொருளாதார செழிப்பை முன்னெடுப்பதில் நீண்ட தூரம் செல்லும்.

**(மூலம்:ஏ.என்.ஐ.)**

காலைக்கதிர் Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## இணக்கமும் விவாகரத்தும்



- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 175

கோப்பாய் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழரசுக் கட்சியின் 'சிந்தனைச் சிற்பி'யுமான கதிரவேற்பிள்ளை, வருமான வரியும், சர்வதேச முதலீடுகளும் பற்றிய சட்ட நுணுக்கங்களில் பிரசித்தம் பெற்ற சட்டத்தரணியான அம்பலவாணரின் சகோதரர்.

இவரது சர்வதேச மதிப்புக்களால் ஸ்ரீலங்காவின் பெரும் முதலீட்டு நிர்வாகங்கள் ஆலோசனைகளுக்காக அவருடன் தொடர்புகளில் இருந்தமையால், நாட்டின் உயர் மட்டங்களில் அவருக்குச் செல்வாக்கு இருந்தது.

இவர்கள் தமிழ் காங்கிரஸின் பழம் பெறும் உறுப்பினர் சிவசுப்பிரமணியம் ஐயாவின் புத்திரர்கள். கொழும்பு நீதி மன்றங்களின் வளாகமான ஹல்ஸ்டோர்ப்பில் அவரது வீட்டில் அவரது மகள்மார்



கதிரவேற்பிள்ளை

ஐயாவின் விருந்துபசாரத்தை தொடர்ந்து நடத்தினர். கதிரவேற்பிளளை நாடாளுமன்ற அமர்வுக்காகக் கொழும்பு வரும் போது - முக்கியமாக வெள்ளிக்கிழமையானால் – அம்பலவாணரும் மதிய மரக்கறி உணவுக்காக அங்கு வருவார். அம்பலவாணர் ஐரோப்பிய பெண் ஒருவரை மணந்திருந்தமையால் அந்த விருப்பத்திற்காக அங்கே வெள்ளிக்கிழமைகளில் வருவது வழக்கம். அந்த வெள்ளிக்கிழமைகளில் நானும் கூட இருந்த வேளைகளில் நடந்த சம்பாசணைகளைக் கேட்கும் போது பலவித சிந்தனைகள் வரும். சுவாரஸ்யமாக பேசப்படும்.

1977 ஆம் ஆண்டுக்கு முந்திய நாள்களில் நான் தமிழரின் கோரிக்கைகளில் ஈடுபடாத– எனது தொழிலும் அங்கு நடந்த – காலங்கள். ஆதலால் சில சம்பாசணைகள் புதிராகவே இருந்தன. அம்பலவாணரின் அலுவலகம் கொழும்பு 7 இகல் அல்பிரெட் ஹவுஸ் கார்டினில் இருந்தது. அவரின் கீழ், பின்னாளில் தமிழ் அகதிகள் புனர்வாழ்வு கழகத்தின் (TRRO) காரியதரிசியான சட்டத்தரணி கந்தசாமி, விடுதலைப் புலிகளின் இடைக்கால கட்டமைப்பு யோசனைத் திட்டத்தை உருவாக்குவதில் பங்கு பற்றிய சட்டத்தரணி போல் டொமினிக்கும் பணியாற்றினர். TRRO வின் பணிமனை அவரது அலுவலகத்தில் ஒரு பகுதியில் இருந்து இயங்கியது. அம்பலவாணரின் அந்த விலாசம்தான் நாடாளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம் கொலை முயற்சிக்குப் பின் உமா மகேஸ்வரனது விலாசமாகவும் பதியப்பட்டு, வெளியிடப்பட்ட சுவரொட்டிகளிலும் இருந்தது. அவை, நாங்கள் புலனாய்வுப் பகுதிகளுடன் மல்லுக்கட்டு அனுபவித்த நாள்கள். அவற்றை விட்டு சம்பாசணைகளுக்கு வருவோம்.

அம்பலவாணர் தமிழ் மக்கள் தங்களது இருப்புக்களின் தன்மைகளிலும், முதலீடுகளின் பலங்களிலும் சிங்கள மக்களோடு இணைந்து வாழ்வதுதான் புத்தி சாதுரியமும் யதார்த்தமானதும் என்ற அபிப்பிராயம் கொண்டவர். கதிரவேல் பிள்ளையின் தமிழரசு நிலைப்பாட்டை கூறுவது பெரிதளவில் தேவையற்றது. பேராண்மை போக்கில் அவர்களோடு சமஷ்டி அடிப்படையில் அதிகாரங்களை பெற்றுக் கொள்ளாவிட்டால் தமிழ் மக்கள் முற்றும் முழுதாக அன்னியப்படுத்தப்பட்டு விடுவார்கள் என்பதை அம்பலவாணரோடு விவாதிப்பார் கதிர்வேற்பிள்ளை. நாள்கள் செல்லச் செல்ல, கதிரவேற்பிள்ளை, தமிழ் மக்கள் கட்டாய திருமணம் ஒன்றினால் பெரும்பான்மையினருடன் இணைக்கப்பட்டு இருக்கிறார்கள் எனவும், அதில் கணவன் அந்தத் திருமண பந்தத்தின் ஆண்மையில், அடிப்பதும் உதைப்பதும் தனது உரிமை, மணவாழ்க்கை என்று ஒன்று வேண்டுமானால் இவற்றை ஏற்றுக் கொண்டுதான் வாழ வேண்டும் என்ற பேராண்மை போக்கே சிங்கள மக்களிடம் உரிமைகளைக் கேட்டால் அவர்களை ஆட்டிப் படைக்கிறது, இதற்கு வழி எங்களுக்கு விவாகரத்து ஒன்றுதான் என பேசும் போது, அம்பலவாணர் பொருளாதார ரீதியில் தமிழ் பகுதிகள் தன்னிறைவு பெறுவதற்கு ஆக வேண்டியவற்றை செய்து, அந்தத் தன்னிறைவில் இருந்து பேரம் பேசாமல், கூட்டம் போட்டு சமஷ்டிக்காக பத்திரிகைகளில் அறிக்கை விடுவதும், நாடாளுமன்றத்தில் பேசுவதும் எதையிம் பெற்றுத் தரப் போவதில்லை என சகோதரரைக் கடிந்து கொள்வார்.

கதிரவேற்பிள்ளையோ, 'இந்தியா எங்களைக் கைவிடப்போவதில்லை, அவர்கள் தமிழ் மக்களை இந்த ஒடுக்கு முறையான திருமணத்தில் இருந்து நீக்கிவிடுவார்கள்' எனக் கூறினால், அம்பலவாணர், அரசியலில் அப்படி பேசுவது சகஜம், ஆனால் யதார்த்தத்தில் இங்கு முதலீடு செய்ய ஆர்வம் கொண்டவர்களை அறிமுகம் செய்கிறேன், அவர்கள் தமிழ் பகுதிகளில் தங்களது முதலீடுகளை செய்து வளர்ச்சியை ஏற்படுத்தி தரக்கூடிய விதத்தில் தமிழ் மக்களை ஊக்கப்படுத்து, நரி போல எங்களது உரிமைகள் பறி போகிறது என ஓலமிடாதே, எனத் தனது உரிமையில் கதிரவேற்பிள்ளையைக் கடிந்து



சீ – நோர் கப்பல் ஒன்று

கொள்வார். 1969இல் நோர்வேயின் அரசு சாரா நிறுவனத்தின் நிதிகள் யாழ்ப்பாணத்தில் முதலீடு செய்யப்படுவதற்காக நோர்வேயில் வசித்த தமிழ் இளைஞர்களின் முயற்சியில் ஏற்பாடுகளில், நிதிகள் ஸ்ரீலங்கா வந்தடைந்த போது அவை 'மாலு – மீன் நிறுவனம்' என்று தனியார் அமைப்பைத் தழுவ, வரிசலுகைகளில் சிக்கல் இருந்தன. இவற்றை நிவர்த்தி செய்வதற்காக நோர்வேயின் அரசு சாரா நிறுவனத்திற்காக Norges goodtempler ungdoms for bund) அவர்களுடன் எனக்கு இருந்த தொடர்புகளால், அம்பலவாணருடன் இணைந்து 'பசியிலிருந்து விடுதலை' (Freedom From Hunger) என்ற பொது நிதியத்தின் ஊடாக சீநோர் (Cey - Nor) அமைப்பாக பாசையூரில் நிறுவி அதன் தொடக்க கால நிர்வாகங்களில் உதவி தந்தோம். அப்படியான பல திட்டங்களுக்கு முயற்சிகள் ஏற்படுத்தப்பட்டாலும் தமிழ் பகுதிகளின் அரசியல் கோஷங்களால் அவை நிறைவேறியது இல்லை. கதிர்வேல் பிள்ளை இந்தியாவினது உதவியு



நோர்வே பிரமுகர் ஆர்னே

டன் விவாகரத்து ஒன்றினைப் பெற்று விட வேண்டும் என்ற முயற்சியில் தொடர்ந்து 1977 ஆண்டு கலவரங்களின் பின் அவற்றைத் துரிதப்படுத்தும் முனைப்புகளில் இந்திரா காந்தியைச் சந்திக்க பயணங்கள் ஏற்படுத்திய காலத்தில் இரண்டு ஏப்ரல் 1981இல் உயிரிழுந்தார்.

1977 ஆண்டு கலவரங்கள் அம்பலவாணர் கொண்டிருந்த இணக்கத்தின் நம்பிக்கைகளிலும் அவருக்கு ஆதங்கங்கள் (தமிழ் மக்கள் பல பேருக்கு தந்தமை போல) ஏற்படுத்தின. அந்த ஆதங்கங்கள் அவரை தமிழ் அகதிகள் புனர் வாழ்வு கழகத்திற்கு ஆதரவு தொடரவும், சன்சோனி ஆணைக்குழுவின் ஆவண கோப்புக்கான நிதி உதவிகளுக்கு பலரிடம் உந்துதல் தர தூண்டியது.

ஆனால் தமிழ் மக்களின் தொடர்ந்த அரசியலும், தம்பியாரின் மறைவும் அவரையும் அந்நியப்படுத்தின. 'சீ–நோர்' நிறுவனத்தின் நோர்வேயின் அரசு சாரா நிறுவனத்தின் ஸ்ரீலங்கா முகாமையாளர் ஆர்னே போறுபோட் (Dr.Arne Fjortoft) இல்லத்தில்தான்ளிக்சொல்ஹெய்ம்கொழும்பில் முதல் வந்தபோது தங்கி இருந்து அரசியல் பிரமு கர்களைச் சந்தித்து தமிழ் மக்களின் கோரிக்கைகளில் ஆர்வம் கொண்டார். இணக்கப்பேச்சு வார்த்தைகள் தொடர்ந்த காலங்களில் எல்லாம் நோர்வேயின் வெளிவகார அமைச்சு பல தகவல்களுக்கு ஆர்னேயில் தங்கியிருந்தது.

கதிரவேற்பிள்ளை 1982 இல் மறைந்த பின் தமிழ் மக்களுக்கு விவாகரத்துதான் பிணக்குகளில் இருந்து விடுபடுவதற்கான வழி என்ற முனைப்புக்கள் விடுதலைக் குழுக்களால் ஆயுத பலங்களோடு ஏற்படுத்தப்பட்டு, பின் தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழ்நாட்டில் தஞ்சம் பெற்று, இந்திய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட திரும்பி வந்து, விடுதலைப் புலிகள் தொடர்ந்து விவகாரத்தைத் தங்களது கையில் எடுத்துப் போராடி, அவை நசுக்கப்பட்டதும், சமஷ்டியைத் தீர்வு என அறிவித்து, இந்திய ஒப்பந்தத்திற்கு அமைய ஆக்கப்பட்ட 13 ஐ நீக்குவதற்கு ஜனாதிபதி கோட்டாபய நடவடிக்கை எடுத்த அவரின் துர்பாக்கியத்தை காலிமுகத்திடல் போராட்டங்கல் எழுந்து, அவை வரை தமிழ் மக்களது வரலாறுகளும் அலை பாய்ந்து வந்து விட்டன. இந்த நக்கத்திலோ போராட்டத்திலோ யதார்த்தமான தீர்வை தமிழ் மக்கள் கண்டதில்லை. அவற்றிலிருந்து பெறப்பட்ட அறிவையும் போக்குகளையும் சிறிது நோக்கலாம்.

(வளரும்....)

## கடலட்டைப் பண்ணைகளின் கெடுதியில் இருந்து ..................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடமாகாணத்தில் இரண்டு லட்சம் பேரை குடும்ப அங்கத்தவர்களாக பிரதிநிதித்துவப்படுத்தும் சுமார் ஐம்பதாயிரம் வறிய மீனவ மக்களாகிய நாங்கள், எங்களின் வாழ்வாதாரத்திற்காக பல தலைமுறைகளாக கடலை மட்டுமே நம்பி வாழ்கின்றோம். ஏழை மீனவ மக்களாகிய நாங்கள் போரினால் மிகவும் பாதிக்கப்பட்டு, தற்போது மீன்பிடி நடவடிக்கைகளுக்கு மண்ணெண்ணெய் தட்டுப்பாடு காரணமாக வாழ்வாதாரத்தை ஈட்டுவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றோம்.

இந்த இக்கட்டான காலகட்டத்தில், எங்கள் வேதனையை அதிகரிக்கும் வகையில், எங்கள் பாரம்பரியக் கடலை அழித்து, எங்கள் வாழ்வாதாரத்தைப் பறித்து, ஏழை மீனவ மக்களாகிய எங்களை மேலும் ஒடுக்கும் பாரிய சதி கடலட்டைப் பண்ணைகள் என்ற போர்வையில் முன்னெடுக்கபடுவதைக் கண்கூடாகக் கண்டு வருகிறோம். வடக்கு மாகாணத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கர் கடல் பரப்பில் நூற்றுக்கணக்கான கடலட்டைப் பண்ணைகள் எந்த அனுமதியும் இன்றி நாளுக்கு நாள் உருவாகி வருகின்றன. ஒரு நாளில் மூன்று வேளை உணவுக்காக கடுமையாகப் போராடும் ஏழை மீனவர்களான எங்களால் ஊழல் அரசு அதிகாரிகளின் உதவியோடு அமைக்கப்பட்டுக்கொண்டிருக்கும் இந்தக் கடலட்டை பண்ணைகளைத் தடுக்க இயலவில்லை.

இந்தக் கடலட்டைப் பண்ணைகளால் எதிர்காலத்தில் எமது பிள்ளைகளுக்கு உண்பதற்கு மீன் கிடைக்காமல் பாரிய போக்கு குறைபாடுகளுடன் பல்வேறு நோய்களுக்கு ஆளாக நேரிடும்.

இந்தத் தீங்கு விளைவிக்கும் கடலட்டை பண்ணைகளில் கடலட்டைகள் வளர்ப்பதற்குப் பதிலாக, சட்டவிரோதமாகக் கடலில் இருந்து கடலட்டைகள் பிடித்து, கடலின் சமநிலையையும் கடலில் உள்ள மீன்களின் இயற்கையான சீர்ப்படுத்தலையும் மிகவும் ஆபத்தான முறையில் அழிக்கின்றனர் என்ற உண்மையையும் உங்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறோம். திரைக்குப் பின்னால் இருந்து இந்தப் பண்ணைகளை நடத்தும் சில முதலாளிகள் நமது மக்களையும், நமது கடல் வளங்களையும் சுரண்டி கோடிக்கணக்கில் சம்பாதித்து வருகின்றர்.

ஆழமற்ற கடலில் கடலட்டைகள் வளர்ப்பு மீன் மற்றும் கடல் வளங்களை அழிப்பது மட்டுமல்லாமல், ஒட்டுமொத்த சுற்றுச்சூழல் அமைப்பையும் அழிக்கின்றன என்பதை மீண்டும் மீண்டும் நிரூபித்த பல ஆய்வுகள் உலகம் முழுவதும் உள்ளன. உலகின் பல்வேறு வளர்ந்த நாடுகள் கடலட்டை பண்ணைகளுக்குத் தடை விதித்திருப்பது கடலட்டை பண்ணைகள் முழுச் சுற்றுச்சூழலுக்கும் கேடு விளைவிக்கிறது என்பதற்கான தெளிவான சான்றாகும்.

நடத்தை சூழலியல் மற்றும் மரபியல் பரிணாமத்தின் முதுகலை ஆராய்ச்சியாளரும் தென்கிழக்கு பல்கலைக்கழக மூத்த விரிவுரையாளருமான பேராசிரியர் ஏ.எம்.ரியாஸ் அஹமட் அவர்களால் வடக்கு கடலில் அவரது தீவிர கள ஆய்வின் அடிப்படையில் எழுதப்பட்ட கடலட்டை யாழ்ப்பாணத் தீவுகளின் கடல்களின் அரசியலும் சூழலியலும் என்ற சமீபத்திய புத்தகம் ஆழமற்ற கடலில் கடலட்டை பண்ணைகள் அமைப்பது எப்படி ஒட்டுமொத்த சுற்றுச்சூழல் அமைப்பையும் அழிக்கும் என்பதற்கு மற்றொரு சான்று.

வறிய மீனவர் சமூகமாகிய நாங்கள், சில வெளிப்புறக் சக்திகள் தங்கள் சுயலாபத்திற்காக மீனவ சமூகத்தினரிடையே மோதலை உருவாக்கி, கடலட்டை பண்ணைகள் என்ற போர்வையில் மீனவர் சமூகத்தை இரண்டாகப் பிரிக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருவதை அவதானித்து வருகிறோம்.

வறிய மீனவர் சமூகமாகிய நாங்கள், வடமாகாணத்தில் இளம் தலைமுறையினரைக் குறி வைத்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதைப்பொருள் விநியோகத்திற்கும் இந்த கடலட்டை பண்ணைகளுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாக சந்தேகிக்கிறோம்.

நாங்கள் யாழ்ப்பாணம் நாகவிகாரையின் பிரதமகுரு வணக்கத்திற்குறிய விமலதேவ தேரரை அனைத்து மக்களுக்கும் உண்மைகளை எடுத்துரைத்து, நமது கடலையும், ஏழை மீனவர்களின் வாழ்வாதாரத்தையும், சுற்றுச்சூழலையும் சில முதலாளிகளின் தங்கள் பினாமிகள் மூலம் சுரண்டுவதில் இருந்து பாதுகாக்க வேண்டும் என வேண்டுகிறோம்.

ஏழை மீனவர்களாகிய நாங்கள் ஜனாதிபதி, பிரதமர், சபாநாயகர் மற்றும் அனைவரையும் யாழ்ப்பாணம் நாகவிகாரையின் பிரதமகுரு வணக்கத்திற்குறிய விமலதேவ தேரர் வாயிலாக பேராசிரியர் ஏ.எம்.ரியாஸ் அஹமட் போன்ற துறைசார் நிபுணர்கள் மற்றும் பாரம்பரிய மீனவர் பிரதிநிதிகள் அடங்கிய குழுவொன்றை அமைத்து மீனவர் சமூகத்தின் சமூக மற்றும் பொருளாதார வாழ்வில் கடலட்டை பண்ணைகள் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் தாக்கம் குறித்து விரிவான ஆய்வை மேற்கொள்ள வேண்டுகிறோம்.

வடமாகாணத்தின் ஆழமற்ற கடலில் தீங்கிழைக்கும் கடலட்டை பண்ணைகள் குறித்த நிபுணர் குழு உண்மை கண்டறிந்து விரிவான அறிக்கை சமர்பிக்கும் வரையில் வடக்கு மாகாணத்தில் கடல் வளத்தையும் மீனவர் வாழ்வாதாரத்தையும் சுற்று சூழலையும் முற்றாக அழிக்கும் கடலட்டை பண்ணைகளின் செயல்பாடுகளை முழுமையாக நிறுத்தி வைக்க வேண்டுமென மன்றாடி கேட்டுக் கொள்கிறோம். - என அக்கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்தன, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, மக்கள் விடுதலை முன்னணியின் (ஜேவிபி) அனுர குமார திசாநாயக்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன், தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் நிறுவுநர் பொ. ஐங்கரநேசன்

ஆகியோருடன் யாழ்ப்பாணம் நாகவிகாரையின் பிரதமகுரு வணக்கத்திற்குரிய விமலதேவ தேரர் ஆகியோருக்கும் இக்கடிதத்தின் பிரதிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## காணாமல் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று இவ்விடயம் தொடர்பில் வாதப் பிரதிவாதம் நடைபெற்ற போது இதுபற்றி குறுக்கிட்டு பேசிய மனோ எம்பி மேலும் கூறியவை வருமாறு:-

காணாமல் போனோர் தொடர்பான காரியாலயத்தின் தவிசாளர், இந்நாட்டில் யாரும் காணாமல் போகவில்லை என்று கூறுகிறார். உங்களுக்கு அதுபற்றி தெரிந்து இருக்க வேண்டும். யாரும் காணாமல் போகவில்லை என்றால் இந்த காரியாலயம் எதற்கு? சபாநாயகர் அவர்களே, இந்த காரியாலயம் பற்றிய சட்டமூலத்தை மிகவும் கஷ்டப்பட்டு நாம் இந்த சபையில் கொண்டு வந்து சட்டமாக்கினோம். இப்போது அரசு தரப்பில் இருக்கும் கூட்டம்தான் இதற்கு அன்று எதிர்ப்பு தெரிவித்தது.

நாம் மாத்தறையில் ஒரு காரியாலயம் திறந்தோம். நான் திறந்து வைத்தேன். யாழ்ப்பாணத்தில் திறந்தேன். மன்னாரிலும் திறந்து வைத்தேன். நீங்கள் எமது காலத்தில் விண்ணப்பங்கள் 65 தான் வந்தது எனவும், இன்று உங்கள் காலத்தில் 2000 விண்ணப்பங்கள் வந்துள்ளன என இப்போது கூறினீர்கள். அந்த கணக்கு எனக்கு ஞாபமில்லை. தேடிப் பார்க்க வேண்டும். ஆனால், நிறைய பணி செய்தோம். நீங்கள் எம்மை வேலை செய்ய விடவில்லை. இப்போது எதிரணியில் உள்ள நாம் உங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குகிறோம். அக்காலத்தில் நீங்கள் எம்மை வேலை செய்ய விடவில்லை.

88/89 ஆண்டு காலத்திலும், 2000 ஆம் ஆண்டுகளிலும் இந்நாட்டில் ஆள்கள் காணாமல் போனார்கள். வடக்கில், கிழக்கில், தெற்கில், மேற்கில் காணமல் போனார்கள். நாடு முழுக்க நடந்தது. இந்த சாபத்தை, பாவத்தை முழுக்கவும் துடைத்து எறிவோம். அதனால்தான் இந்த காரியாலயத்தை நாம் அமைத்தோம். நீங்கள் எதிரணியில் இருந்து எமக்கு தராத ஒத்துழைப்பை நாம் இப்போது இங்கிருந்து உங்களுக்கு தருகிறோம். ஆனால், அந்த தவிசாளரை மாற்றுங்கள். அவரது கூற்று, இன்று பதிவாகி உள்ளது. அவரது கூற்றுக்கு இன்று கூட்டமைப்பும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் செய்திருக்க வேண்டும். அவர்கள் நல்லத்தனம் காரணமாக ஆர்ப்பாட்டம் செய்யல்லை போலும். - என்றார்.

## நாட்டை அழித்தவர்கள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும் எனக் கூக்குரல் இடுகின்றனர்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று நடைபெற்ற சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் உரையாற்றிய அவர், மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை முகங்கொடுத்துள்ள பிரச்சினைகளைப் பார்க்கின்ற போது பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு மூலகாரணமாகக் கடந்த பல வருட காலமாக இடம்பெற்றுள்ள பிரச்சினைகளைக் கூறலாம். இந்தப் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு 1948 இலிருந்து ஆட்சி புரிந்த அனைவரும் பொறுப்புக்கூற வேண்டும்.

நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் இந்திய வம்சாவழியினர் ஆற்றிய பாரிய பணிகளாக துறைமுகம் அமைத்தல், தேயிலைக் கைத்தொழில் வளர்ச்சிக்கு உதவியமை போன்றவற்றைக் குறிப்பிட்டார். டி.எஸ்.சேனநாயக்க இந்திய வம்சாவழியினரின் குடியுரிமையைப் பறித்தார்.

இலங்கைப் பொருளாதாரத்துக்குப் பாரிய பங்களிப்பை வழங்குவது ஆடைக் கைத்தொழிலாக இருக்கின்ற போதிலும் தேயிலையின் ஊடாகவே அதிக ஏற்றுமதியை நாம் பெறுகின்றோம்.

இவ்வாறு 1948 இலிருந்து நாட்டின் பொருளாதாரத்துக்கு உதவிய தேயிலைத் தொழிலாளர்களுக்கு நாம் என்ன உதவிகளை செய்துள்ளோம்?

இந்தியத் தமிழர்களை வெளியேற்றுவதற்கு அரசு எடுத்த முயற்சியே தற்போதைய பொருளாதார வீழ்ச்சிக்கு ஒரு காரணமாகும்.

மட்டக்களப்பின் ஒரு பகுதியாகவே அம்பாறை காணப்பட்டது. ஆனால், தற்போது அது ஒரு மாவட்டமாக உருவாகியுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் காணியில்லாத அநேகர் இருந்தனர். எந்த இனத்தவருக்கும் காணி வழங்கப்படாத போது வேறு இடங்களிலிருந்து மக்களைக் கொண்டு வந்து அம்பாறை மாவட்டத்தில் குடியமர்த்தினர்.

நான் 500 இளைஞர்களை மாத்தறைக்கு அழைத்துச் சென்று காணி வழங்க முனைந்தால் மாத்தறை இளைஞர்கள் விரும்புவார்களா? இதற்கு உடன்படுவார்களா?

இன்று பொருளாதாரப் பிரச்சினையைப் பற்றி பேசிக்கொண்டிருக்கின்றோம். நாட்டை அழித்தது அரசியல்வாதிகள்தான் என்று ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினர்களும் சிங்கள மக்களுக்கு உண்மையைக் கூறுங்கள்.

தமிழ் மக்கள் எதிர்நோக்குகின்ற அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்காது தடையாக இருப்பது யார்? என நீங்களே கூறுங்கள்.

இங்கு வரிச்சலுகை பற்றி பேசப்பட்டது. சுற்றுலாப் பயணிகள் வருகின்ற காலம் தடையை ஏற்படுத்த வேண்டாம் என்று கூறினர். சுற்றுலாப் பயணிகளால் மாத்திரம் தற்போதைய நெருக்கடி நிலையைச் சீர்செய்ய முடியாது.

1948ஆம் ஆண்டு தொடக்கம் தற்போது வரை நீடித்து வருகின்ற தீர்க்கப்படாத பிரச்சினைகளைத் தீர்க்காது விட்டால் இந்த நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது.

ஐரோப்பியர்கள் 400 ஆண்டுகளுக்கு மேலாக நாட்டை ஆண்டனர். சுதந்திரத்தின் பின்னர் பண்டாராநாயக்கா சிங்களத் தனிச்சட்டத்தைக் கொண்டு வந்தார். சிவில் நிர்வாக முறைமை கொண்டுவரப்பட்டமையால் தமிழர்கள் வேலை வாய்ப்பை இழந்தனர்.

யாழ்ப்பாணம் மாவட்டத்திலும், மொனராகலை மாவட்டத்திலும் ஒரே புள்ளிகளைப் பெறுகின்ற மாணவர்களில் மொனராகலை மாவட்ட மாணவர் பல்கலைக்கழகத்துக்குச் செல்ல தகுதியுடையவராகின்றார். ஆனால், யாழ். மாவட்ட மாணவரின் அனுமதி நிராகரிக்கப்படுகின்றது. இங்கு அநீதியே இழைக்கப்படுகின்றது.

அம்பாறை, கேகாலை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் பல்கலைக்கழகம் செல்ல வேண்டும் என்பதற்காக யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் தெரிவான மாணவரின் வாய்ப்பைப் பறிப்பது நியாயமானதா?

இலங்கையை அழித்தவர்கள்தான் தற்போது பிரச்சினைகளுக்குத் தீர்வு வேண்டும் என்று கூக்குரலிடுகின்றனர். நீண்ட காலமாகத் தீர்க்கப்படாத தமிழர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாது விட்டால் இந்த நாட்டின் பிரச்சினையைத் தீர்க்க முடியாது.

முன்னைய அரசு சர்வதேசத்துக்குப் பல வாக்குறுதிகளை அளித்தது. அதிலொன்று போரை முடித்துக்கொள்ளுங்கள்; தமிழர் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்குகின்றோம் என்பதாகும்.

2012 வரை இந்த வாக்குறுதி தொடர்பில் ஆர்வம் காட்டப்படவில்லை. ஆகவேதான் இந்தப் பிரச்சினை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்துக்குச் சென்றது.

சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கும் படி பரிந்துரை செய்யுமாறு கேட்கின்றேன். அவ்வாறு செய்வீர்களா?

இந்த இடத்தில் எனது புதல்வரை, கணவரைக் கையளித்தேன் என்று காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கூறுகின்றனர். தனது புதல்வர், கணவனுக்கு நடந்தவற்றைக் கேட்பதற்கு அந்தத் தாய்க்கும், மனைவிக்கும் உரிமை இருக்கின்றது.

தேர்தல் காலம் தாழ்த்தப்படக் கூடாது. இந்த நாட்டில் அதிகாரப் பரவலாக்கத்துக்கு ஒரு முறையைக் கொண்டு வாருங்கள். நாட்டை இரண்டாகப் பிரிக்கக் கூறவில்லை. ஒரே நாட்டுக்குள் அதிகாரப் பரவலாக்கத்தைக் கொண்டு வரும்படியே கூறுகின்றோம்.

கமத்தொழில் அமைச்சின் ஊடக சேதனப் பசளையைப் பயன்படுத்த ஒரு ஹெக்டேயருக்கு 20 ஆயிரம் ரூபா வழங்கப்படுகின்றது. 17 கம்பனிகள் சேதனப் பசளைக்காகப் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

மட்டக்களப்பில் மாத்திரம் 73 ஆயிரம் ஹெக்டேயர் பரப்பளவு காணிகள் உள்ளன. 20 ஆயிரம் ரூபா வழங்குவதென்றால் 160 மில்லியன் ரூபா தேவைப்படுகின்றது. சேதனப் பசளையில் ஈரசாணம் மாத்திரமே உள்ளது. இந்தக் கம்பனிகளுக்கு வழங்கும் பணத்தைப் பிரதேச சபையின் ஊடக விவசாயிகளுக்கு வழங்குங்கள்.

மாவட்ட அபிவிருத்தித் தலைவர்களிடம் சேதனப் பசளையைக் காண்பிக்குமாறு கூறினால் அவர்கள் அவற்றை நிராகரிக்கின்றனர். மாவட்ட அபிவிருத்தித் தலைவர்களுக்கும் இந்தக் கம்பனிகளுக்கும் ஏதோவொரு பிணைப்பு உள்ளது. அவர்களுக்கும் இந்தப் பணத்திலிருந்து செல்கின்றது போலும்.

பண வீக்கம் அதிகரித்துள்ளது. இலங்கைக்கு 15 முதலீட்டாளர்கள் வருகை தந்துள்ளனர். அவர்களைக் கொண்டு எமது நாட்டில் முதலீடுகளை அதிகரிக்க வேண்டும் - என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு –
தொலைபேசி இலக்கம்
076 443 8622

காலைக்கதிர் Kalaikkathir

# மார்ச் 20 ஆம் திகதிக்கு முன்னர் தேர்தலை அறிவிக்க முடியுமாம்!

## தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் அறிவிப்பு

வாக்காளர் பெயர் பட்டியலை இறுதிப்படுத்தும் பணிகள் இம்மாத இறுதிக்குள் நிறைவடையும். அதன் பின்னர் அரசமைப்பு சார் தடைகள் ஏற்படுத்தப்படாவிட்டால் , 2023 மார்ச் 20 ஆம் திகதிக்கு முன்னர் உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான தினத்தை அறிவிக்க முடியும் என்று சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமால் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

உள்ளூராட்சி மன்றங்களின் ஆயுட் காலம் 4 ஆண்டுகள் என்று உள்ளூராட்சி மன்ற கட்டளைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதே வேளை இந்த ஆயுட்காலத்தை குறைப்பதற்கு அல்லது நீடிப்பதற்காக அதிகாரம் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சருக்கு காணப்படுவதாகவும் குறித்த சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் ஆயுட் காலத்தை குறைப்பதானாலும் , நீடிப்பதானாலும் அதற்கான அதிகபட்ச காலம் ஒரு வருடம் மாத்திரமேயாகும். அதற்கமையவே இவ்வாண்டு மார்ச் 20 ஆம் திகதி நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த தேர்தல் , விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரால் ஒரு வருடத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

அமைச்சருக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமையவே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. தேர்தலொன்றை நடத்துவதற்கான ஏற்பாடுகளை செய்வதற்கு எமக்கு சுமார் இரண்டு மாதங்கள் போதுமானவை.

உள்ளூராட்சி தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளை கடந்த ஆண்டு டிசெம்பரில் ஆரம்பிப்பதற்கு நாம் தீர்மானித்திருந்தோம். இது தொடர்பில் ஊடக அறிவித்தலையும் வெளியிட்டோம்.

இதற்கிடையில் இவ்வாண்டு ஜனவரி மாதத்தில் அமைச்சரால் தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது.

இந்நிலையிலேயே கடந்த செப்ரெம்பர் மாதம் முதல் மீண்டும் தேர்தல் தொடர்பில் தீர்மானிப்பதற்கான அதிகாரம் ஆணைக்குழுவிற்கு கிடைக்கப் பெற்றுள்ளது.எவ்வாறிருப்பினும் இதன் போது வாக்காளர் பெயர் பட்டியல் தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டியுள்ளது. 2021 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர் பட்டியல் ஒக்ரோபர் 31 ஆம் திகதி இறுதிப்படுத்தப்பட்டது.

இதன் மூலம் 18 வயதுடைய இளைஞர்களுக்கு வாக்களிப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளமை நாம் பெற்றுக்கொண்ட வெற்றியாகும். இதற்கு முன்னர் 19 அல்லது 20 வயதிலேயே வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட்டது.

62 ஆண்டுகளுக்கு பின்னர் இளைஞர்களுக்கு இந்த வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இதற்கமைய பெப்ரவரி முதலாம் திகதி முதல் மே மாதம் 31 ஆம் திகதி வரை, ஜூன் முதலாம் திகதி முதல் செப்ரெம்பர் 30 ஆம் திகதி வரை புதிய இளைஞர் வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்படும். சட்ட ரீதியாக இவற்றை இறுதி செய்வதற்கு முன்னர் முன்னெடுப்பதற்கு சில படிமுறைகள் காணப்படுகின்றன.

இந்த வாக்காளர் பெயர் பட்டியலை இறுதி செய்வதற்கு முன்னர் தேர்தலுக்கான தினம் அறிவிக்கப்பட்டால், இளைஞர்கள் வாக்களிப்பதற்கான வாய்ப்பை இழப்பார்கள்.

2021 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர் பட்டியலில் உள்ளடங்குவோருக்கு மாத்திரமே வாக்களிப்பதற்கான வாய்ப்பு கிட்டும். 62 வருடங்களில் பின்னர் ஆணைக்குழுவால் பெற்றுக் கொடுக்கப்பட்ட அந்த உரிமையை நீக்குவதற்கு நாம் தயாராக இல்லை.

எனவே இம்மாத இறுதியில் இந்த வாக்காளர் பெயர்பட்டியலை இறுதிப்படுத்த எதிர்பார்த்துள்ளோம். அதற்கமைய அதன் பின்னர் மார்ச் 20 ஆம் திகதிக்கு முன்னர் தேர்தலை நடத்துவதற்கான தினத்தை அறிவிப்பதற்கான அரசமைப்பின் ஊடாக வழங்கப்பட்டுள்ள பொறுப்பை நிறைவேற்றுவதே ஆணைக்குழுவின் இலக்காகும். அரசமைப்பு சார் தடைகள் ஏற்படுத்தப்படாவிட்டால் இதனை எம்மால் நிறைவேற்ற முடியும். – என்றார்.

# ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சிக் காலத்தில் ராஜபக்ஷக்களுக்கு தண்டனை நிச்சயம்!

## எதிர்க்கட்சி தலைவர் சஜித் உறுதி

கொழும்பு, நவ. 09

ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சியில் அரசியல் தலையீடுகளற்ற சுயாதீன விசாரணைகளை முன்னெடுத்து ராஜபக்ஷாக்களால் கொள்ளையிடப்பட்ட பணத்தை மீளப் பெறுவதோடு மட்டுமல்லாமல் , அவர்களுக்கு தண்டனையும் வழங்கப்படும் என்று உறுதியளிப்பதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

மதவாச்சி பிரதேசத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட எதிர்க்கட்சிகளிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கும் சூது விளையாட்டை அரசாங்கம் மீண்டும் ஆரம்பித்துள்ளது.

ஆனால் ஐக்கிய மக்கள் சக்தியின் எந்தவொரு உறுப்பினரும் இந்த வங்குரோத்து அரசாங்கத்துடன் இணையப் போபவர்களல்லர் என்பதை பொறுப்புடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மக்கள் உண்பதற்கு உணவைப் பெற்றுக் கொள்வதில் கடும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள போதிலும் , அரசாங்கம் ராஜபக்ஷக்களை பாதுகாப்பதற்கு முக்கியத்துவமளித்துக் கொண்டிருக்கிறது.

எமது ஆட்சியில் அரசியல் தலையீடுகளற்ற சுயாதீன விசாரணைகளை முன்னெடுத்து ராஜபக்ஷக்களால் கொள்ளையிடப்பட்ட பணத்தை மீளப் பெறுவதோடு மட்டுமல்லாமல், அவர்களுக்கு தண்டனையும் வழங்கப்படும் என்று உறுதியளிக்கின்றேன்.


நாட்டை வங்குரோத்து நிலைமைக்கு உள்ளாக்கிய கொள்ளையர்களைக் கைதுசெய்யும் பொறுப்பை, ஷானி அபேசேகரவிடம் வழங்க முடியுமல்லவா? அரசாங்கத்தின் நோக்கம் ராஜபக்ஷாக்களை பாதுகாப்பதே என்பதால் தான் அவரிடம் இந்த பொறுப்பை ஒப்படைக்காமலுள்ளனர்.

தன்னை ஜனாதிபதியாகத் தெரிவு செய்த 134 உறுப்பினர்களுக்கு பாதுகாப்பையும் , இழப்பீட்டையும் வழங்குவதே தேசிய நிரலில் முதலிடத்தில் காணப்படுகிறது.

இந்த நிலைமையை மாற்றியமைப்பதற்காகவே விரைவில் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று கோருகின்றோம். தேர்தலால் மாத்திரமே மக்கள் விரும்பும் அரசாங்கத்தை அமைக்க முடியும். அரசாங்கத்தின் அரசியல் சூழ்ச்சி தோற்கடிக்கப்பட வேண்டும்.

மக்கள் சக்தியால் சூழ்ச்சிகளை தோல்வியடைச் செய்து , அவர்கள் விரும்பும் ஆட்சியை அமைப்பதற்கு வாய்ப்பு உருவாக்கிக் கொடுக்கப்படும். தேர்தல் நடத்தப்படும் வரை நாம் எமது போராட்டங்களைத் தொடர்வோம். – என்றார்.

# ஹெரோயின், ஊசி மருந்துகளுடன் ஒருவர் கிளிநொச்சியில் கைது!



கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உழவனூர் பகுதியில் தருமபுரம் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைவாக ஹெரோயின் மற்றும் ஊசி மருந்துகள் வீடு ஒன்றில் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டதுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சிறுபொதியில் மறைத்து வைக்கப்பட்ட ஹெரோயின், ஊசி மருந்துகள், மருத்து வில்லைகள் 720 மற்றும் 20 லீற்றர் கசிப்பு என்பனவற்றை மறைத்து வைத் திருந்த நிலையில் சந்தேக நபர் ஒருவரும் தர்மபுரம் பொலிஸாரால் கைது செய்யப் பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் விசாரணைகளின் பின்னர் நேற்று (செவ்வாய்க்கிழமை) கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார் என தருமபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி. எம். சதுரங்க தெரிவித்தார்.

# மக்கள் ஆணை இல்லாத அரசுக்கு சர்வதேசம் ஒத்துழைப்பு வழங்காது!

## ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு



தேர்தலை நடத்த வேண்டிய தேவை தற்போது இல்லை என ஐக்கிய தேசிய கட்சி குறிப்பிட்டுள்ளமை முட்டாள்தனமானதாகும். மக்களாணை இல்லாத அரசாங்கத்துக்கு சர்வதேசம் ஒத்துழைப்பு வழங்காது.

ஆகவே, தமக்கான அரசாங்கத்தை தெரிவுசெய்ய தேர்தல் நிச்சயம் நடத்தப்பட வேண்டும் என பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள சுதந்திர மக்கள் காங்கிரஸ் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

தேசிய வருமானம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சட்ட மூலம் இவ்வாரம் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

அத்துடன் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவு திட்டம் எதிர்வரும் 14 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது, இதனைத் தொடர்ந்து நாட்டு மக்களுக்கு பொருளாதார ரீதியில் மிக மோசமான நெருக்கடிகளை எதிர்க்கொள்ள நேரிடும்.

விருப்பத்துடன் வரி அதிகரிக்கவில்லை , மாற்றுதிட்டம் இல்லாத காரணத்தால் வரி அதிகரிப்பை அதிகரிக்க நேரிட்டுள்ளது என அரசாங்கம் குறிப்பிடுகிறது, நடைமுறைக்கு சாத்தியமான பல திட்டங்கள் உள்ளன , ஆனால் அரசாங்கம் வரி அதிகரிப்பை மாத்திரம் பிரதான பொருளாதாரக் கொள்கையாகக் கொண்டுள்ளது.

அரச நிர்வாகத்தில் ஊழல் மோசடி மிதமிஞ்சியுள்ளதால் சர்வதேச நிறுவனங்கள் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்குவதை புறக்கணித்துள்ளன.

மோசடி செய்யப்பட்டுள்ள அரச நிதியை மீண்டும் அரசுடமையாக்க அரசாங்கம் அவதானம் செலுத்த வேண்டும்.

வரி அதிகரிப்பு நடுத்தர மக்களின் வாழ்க்கையில் மிக மோசமான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதை அரசாங்கம் கவனத்திற் கொள்ளவில்லை.அரச வருமானத் தை அதிகரிப்பதற்கு நடுத்தர மக்களைப் பலியாக்குவது வெறுக்கத்தக்கதொரு செயற்பாடாகும்.

பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையிலான தெரிவு குழு தேர்தல் முறைமை தொடர்பான அறிக்கையை சமர்ப்பித்துள்ள நிலையில் தேர்தல் முறைமை தொடர்பில் புதிய தெரிவு குழு ஒன்றை ஸ்தாபிக்க வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளமை கவனிக்கத்தக்கது.

எல்லை நிர்ணயக் குழு நியமனம் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்குத் தடையாக அமையாது என அரசாங்கம் குறிப்பிடுகிறது. எல்லை நிர்ணய அறிக்கை எத்தன்மையில் அமையும் என்பதை எதிர்பார்த்துள்ளோம்.

அறிக்கையின் பரிந்துரைகள் முரண்பட்டனவாகக் காணப்பட்டால் அது உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு பாதிப்பை ஏற்படுத்தும்.

தேர்தலை நடத்த வேண்டிய தேவை தற்போது கிடையாது என ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன குறிப்பிட்டுள்ளமை மூர்க்கத்தனமானதாகும். ஐக்கிய தேசிய கட்சிக்கு மக்களாணை கிடையாது. ஆகவே ஐக்கிய தேசிய கட்சி தேர்தலுக்கு செல்ல விரும்புவதில்லை.

மக்களாணை இல்லாத அரசாங்கத்துக்கு சர்வதேசம் ஒருபோதும் ஒத்துழைப்பு வழங்காது.இந்த அரசாங்கத்துக்கு மக்களாணை கிடையாது.

ஆகவே, தமக்கான அரசாங்கத்தை தெரிவு செய்துகொள்ள நாட்டு மக்களுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் .உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிற்போடப்பட்டால் அதற்கு எதிராக நிச்சயம் நீதிமன்றத்தை நாடுவோம். – என்றார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.11.2022இல் வெளியிடப்பெற்றது.